Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

ஈழநாடு

EELA NADU

National TAMIL DAILY

தேசிய தினசரி

போன 389

தபாற் பெட்டி எண்: 49

மலர் 3 யாழ்ப்பாணம். பிலவ ஆவணி 20 ஆம் நாள் ரவி அவ்வல் 24 (5-9-61) செவ்வாய்க்கிழமை இதழ் 174

வாசனை உலகில் ஓர் பரபரப்பு!

இன்பம் தரும் 33 303 3003 பத்திகளை

உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்கள்:

S. V. முருகேசன் அன் சன்ஸ்

சென்னை பெங்களூர்–2. மதுரை

தமிழ் எம். பி.க்களுக்கு

மேலும் 4 மாத லீவு

பார்லிமெண்ட் வழங்கியது

உடுப்பிட்டி எம். பி. பிரேரிக்க தொண்டமான் ஆதரித்தார்

கொழும்பு, திங்கள்

தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்துக்கும் இதர தமிழரசுக் கட்சி எம். பி. க்களுக்கும் இன்று பார்லிமெண்ட் மேலும் நான்கு மாத விடுமுறை வழங்கியது. இவர்களுக்கு லீவு வழங்க வேண்டுமென்ற பிரேரணையை உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் கொண்டுவந்தார். நியமன எம். பி. திரு. எஸ். தொண்டமான் பிரேரணையை ஆமோதித்தார்.

ஜனப் பிரதிநிதிகள் சபை இன்று காலை சபாநாயகர், திரு. ஆர். எஸ். பெல்பொல தலைமையில் கூடியது.

1961-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் நான்காந் திகதி தொடக்கம் மேலும் நான்கு மாதங்களுக்கு காங்கேசன் துறைத் தொகுதி எம். பி. திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்துக்கு விடுமுறை வழங்க வேண்டுமென்று உடுப்பிட்டி எம். பி திரு. எம். சிவசிதம்பரம் பிரேரணை கொண்டுவந்தார்.

இப் பிரேரணையை நியமன எம். பி. திரு. எஸ். தொண்டமான் ஆமோதித்தார். வாக்கெடுப்பில்லாமலே பிரேரணை நிறைவேறியது.

வவனியாத் தொகுதி எம். பி. திரு. டி. சிவசிதம்பரம் பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம், வட்டுக்கோட்டை எம். பி. திரு. ஏ. அமிர்தலிங்கம், உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம், ஊர்காவற்றுறை எம். பி. திரு. வி. ஏ. கந்தையா, கல்குடா எம். பி. திரு. பி. மாணிக்கவாசகர், நல்லூர் எம். பி. டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன், கிளிநொச்சி எம். பி. திரு. எஸ். சிவசுந்தரம், பட்டிருப்பு எம். பி. திரு. எஸ். எம். இராசமாணிக்கம், மட்டக்களப்பு எம். பி. திரு. எஸ். இராசதுரை, திருக்கோணமலை எம். பி. திரு. என். ஆர். இராஜவரோதயம், சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம், மன்னார் எம். பி. திரு. வி. ஏ. அழகக்கோன், கோப்பாய் எம். பி. திரு. எம். பாலசுந்தரம் ஆகியோருக்கும் மேலும் நான்கு மாதம் லீவு வழங்க வேண்டுமென்று உடுப்பிட்டி எம். பி. சிவசிதம்பரம் மற்றொரு பிரேரணை கொண்டுவந்தார். இப் பிரேரணையையும் திரு. தொண்டமான் ஆமோதித்தார். வாக்கெடுப்பின்றி நிறைவேறியது.

சபாநாயகர் மன்னிப்பு கேட்டுக் கொண்டார்

சபையில் நடைபெற்ற சம்பவத்தின் எதிரொலி

கொழும்பு, திங்கள்

இன்று ஜனப்பிரதிநிதிகள் சபை கூடியபோது சபாநாயகர் திரு. ஆர். எஸ். பெல்பொல, சென்ற வெள்ளிக்கிழமை சபையில் நடைபெற்ற ஒரு சம்பவம் சம்பந்தமாக சபையிடமும், திரு. லக்ஷ்மண் ராஜபக்ஷவிடமும் மன்னிப்புக் கேட்டுக்கொண்டார். சென்ற வெள்ளிக்கிழமை பெலியாத்தை அங்கத்தினரின் சார்பாக முன்னறிவித்தல் கொடுக்கப்பட்டிருந்த ஒரு கேள்வியை திரு. லக்ஷ்மன் ராஜபக்ஷ கேட்டார். (பெலியாத்தை அங்கத்தினர் அப்போது சபையில் ஆஜராயிருக்கவில்லை) ஆனால் சபாநாயகர் இதை அனுமதிக்க மறுத்ததுடன், இக்கேள்வியைக் கேட்கக்கூடாதென பெலியாத்தை அங்கத்தினர் கேட்டுக்கொண்டிருப்பதாய்த் தெரிவித்தார், இதைத்தொடர்ந்து சபாநாயகருக்கும் திரு. லக்ஷ்மன் ராஜபக்ஷவுக்குமிடையே வாக்குவாதம் ஏற்பட்டது.

இன்று காலை சபை கூடியபோது திரு. லக்ஷ்மண் ராஜபக்ஷ மீண்டும் இதே கேள்வியைக் குறிப்பிட்டு, சபாநாயகருடன் வாக்குவாதத்திலீடுபட்டதுடன், சபாநாயகர்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றைக் கொண்டுவரப்போவதாய்த் தெரிவித்தார்.

இடைவேளைக்குப்பின் சபை கூடியபோது, இதுசம்பந்தமாகத் தமது தவறை ஏற்றுக் கொண்டு மன்னிப்பு அறிக்கை ஒன்றைச் சபாநாயகர் வாசித்தார்.

"ஆவ்ரோ வியானம்

புதுடில்லி, செப். 4

கான்பூரில் கட்டப்பட்டுவரும் "ஆவ்ரோ 748" விமானம், இரண்டு அல்லது மூன்று மாதங்களில் பூர்த்தியாகிவிடுமென அறிவிக்கப்பட்டது.

வருகிற 17ம் திகதி கல்வி இன்ஸ்பெக்டர்கள் கூட்டம்

வெளியிலிருந்து கல்வி அதிகாரிகள் திரட்டுவதை ஆட்சேபிக்கும்

யாழ்ப்பாணம், திங்கள்

கல்வி இன்ஸ்பெக்டர்கள் யூனியன் வருகிற 17 ம் தேதி காலை கொழும்பு தேர்ஸ்டன் கல்லூரியில் ஒரு விசேஷ கூட்டத்தை நடத்தும். 10 லிருந்து 15 வருடம் இன்ஸ்பெக்டர்களாகச் சேவை செய்து நன்கு தகுதி பெற்றவர்களிடையே இருந்தல்லாது, வெளியிலிருந்து கல்வி அதிகாரிகளைத் திரட்டும் யோசனையை ஆட்சேபிக்குமுகமாகவே இக்கூட்டம் நடத்தப்படுவதாகக் கூறப்படுகிறது. இன்ஸ்பெக்டர்களின் சமீபத்திய பதவி உயர்வுபற்றியும் யூனியன் திகிலடைந்திருக்கிறது.

நியமனம், பதவி உயர்வு, இடமாற்றம் ஆகியவைபற்றி பொது விசாரணைக் கமிஷன் ஒன்றை நியமிக்குமாறு வற்புறுத்துவதெனவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தென்னாட்டில் எஃகு ஆலை

சென்னை, செப். 4

தென்னாட்டில் எஃகு ஆலை ஒன்றை அமைக்கும் சாத்தியம் பற்றி இன்று லோகசபையில் கேள்விகள் கேட்கப்பட்டன. இதுபற்றி சோதனைகள் மேற்கொள்ளப்படுவதாயும், இதன் பின்பே தொழிற்சாலைபற்றி முடிவு செய்யப்படுமென்றும் எஃகு மந்திரி சுவர்ண்சிங் கூறினார்.

விபத்து தடுப்பு வாரம்

கொழும்பு, திங்கள்

சென்ற ஞாயிற்றுக்கிழமை வாகனப் போக்குவரத்துப் பொலிசார் நடத்திய விபத்து தடுப்புவாரம் வெற்றிகரமாக நடைபெற்றது. ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் 2 விபத்துக்களே நடைபெற்றன. இதர ஞாயிற்றுக்கிழமைகளில் 8 முதல் 10 விபத்துக்கள் நடைபெறுவதுண்டு.

நடுநிலைமைத் தலைவர்களின் தூதுகோஷ்டி

அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்கும் சமரசத் தூது

பெல்கிரேட், செப். 4

உலகநெருக்கடியைத் தணிப்பதற்கும் உலகத்தை எதிர்நோக்கியுள்ள யுத்த அபாயத்தைத் தவிர்ப்பதற்கும் பெல்கிரேட் மகாநாட்டில் கலந்துகொண்டுள்ள தலைவர்களின் ஆறு நாடுகளைச் சேர்ந்த தலைவர்கள் திரை மறைவில் ஆலோசனை செய்து வருகின்றனர்.

இந்தியப் பிரதமர் நேரு யூகோஸ்லேவிய அதிபர் மார்ஷல் டிட்டோ, இந்தோனேஷிய அதிபர் டாக்டர் சுகர்னோ, பர்மா பிரதமர் ஊநூ, ஐக்கிய அரபுக் குடியரசு அதிபர் கேனல்நாசர், கானா ஜனாதிபதி டாக்டர் நிக்ருமா ஆகிய ஆறு தலைவர்களும் நேற்று தனியாக கூடி ஆராய்ந்தனர்.

அமெரிக்க ஜனாதிபதி கென்னடியும் சோவியத் பிரதமர் குருஷ்சேவும் மீண்டும் சந்தித்துப் பேசுவதன் மூலமே உலக நெருக்கடியைத் தணிக்க முடியுமென்று இத் தலைவர்கள் ஏகமனதாக அபிப்பிராயம் கொண்டுள்ளதாகவும் சோவியத், அமெரிக்கத் தலைவர்கள் சந்தித்துப் பேசுவதற்கு வழி செய்யவேண்டுமென்று அவர்கள் ஒப்புக்கொண்டதாகவும் கூறப்படுகிறது.

அமெரிக்காவுக்கும் சோவியத்யூனியனுக்கும் நடுநிலைமை நாடுகள் சிலவற்றின் தலைவர்களைக் கொண்ட தூதுகோஷ்டிகளை அனுப்பவேண்டுமென்ற யோசனையை ஆறு தலைவர்களும் பரிசீலனை செய்ததாகவும் அறியப்படுகிறது.

ஆறு தலைவர்களின் யோசனைகளும் இன்றைய மகாநாட்டில் தெரிவிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

அமெரிக்க அதிபர் கென்னடியும் சோவியத் பிரதமர் குருஷ்சேவும் விரைவில் சந்தித்துப் பேசுவார்களென்று பாரதப் பிரதமர் நேரு நேற்று நம்பிக்கை தெரிவித்தார். கென்னடி – குருஷ்சேவ் சந்திப்பின் போது நடுநிலைமை நாடுகளெதுவும் கலந்துகொள்வதை தாம் எதிர்ப்பதாகவும் திரு. நேரு கூறினார்.

பாதரட்சைகளுக்கு ரஷ்யா ஆர்டர்

புதுடில்லி, செப். 4

ஆக்ராவிலிருந்து ரஷ்யா 1,87,000 ஜோடி பாதரட்சைகளுக்கும், கிழக்கு ஜெர்மனி 20,000 ஜோடி பாதரட்சைகளுக்கும் ஆர்டர் கொடுத்திருக்கின்றன.

பெல்கிரேட், செப். 4

பெல்கிரேட் நடுநிலைமை அதிபர்கள் மகாநாட்டில் கலந்துகொள்ளும்பொருட்டு காங்கோ பிரதமர் திரு. அடோலாவும் உதவிப் பிரதமர் திரு. கிஸங்காவும் வந்துசேர்ந்தனர்.

பார்லிமெண்ட் கட்டடம் விஸ்தரிப்பதற்கான யோசனை

கொழும்பு, திங்கள்

பிரதிநிதிகள் சபைக் கட்டடத்தை விஸ்தரிப்பதற்கான முயற்சிகள் நடைபெற்றுவருகின்றன. பழைய அரசாங்க சபைக் கட்டடமே இப்போது பிரதிநிதிகள் சபைக் கட்டடமாக உபயோகிக்கப்பட்டுவருகின்றது. 157 எம். பி. க்களைக் கொண்ட சபைக்கு இக்கட்டடம் போதுமானதல்ல என முறையிடப்பட்டுள்ளது. எம். பி. க்கள் அதிக தொகையினராகக் கூடுவதற்கும் எம். பி. க்கள் பொதுமக்களைச் சந்தித்துப் பேசுவதற்கும் இக் கட்டடம் போதாது. ஆகையால் தான் கட்டடத்தைப் பெரிதாக்கும் முயற்சிகள் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. பார்லிமெண்ட் கூடியிருக்கும் நேரங்களில் பல தொகுதிகளிலிருந்தும் எம். பி. க்களைக் காணவருவோரை எம். பி. க்கள் சந்தித்துப் பேசிக்கொள்வதற்குப் பார்லிமெண்ட் கட்டடத்தில் பிரத்தியேகமான அறை எதுவும் இப்போது இல்லை.

சபைமுதல்வர் திரு. சி. பி. டி' சில்வா இன்னும் சில அதிகாரிகளுடன் கலந்தாலோசித்ததன் பேரில் இக்கட்டடம் விஸ்தரிக்கப்படல் வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. பழைய செக்ரட்டேரியட் கட்டடத்தின் ஒரு பகுதியையும் சேர்த்து கட்டடம் நீடிக்கப்படல்வேண்டும் என யோசனை கூறப்பட்டது.

இவ்விஷயம் பற்றி மராமத்து இலாகாவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இதுசம்பந்தமாக மராமத்து இலாகா திட்டங்கள் வகுத்து வருகிறது. மராமத்து இலாகா தனது திட்டங்களைச் சமர்ப்பித்தபின்னர் சபைமுதல்வர் எம். பி. க்களின் கமிட்டியொன்றுடன் சேர்ந்து இதற்கு வேண்டிய நிதி விஷயங்களைக் கலந்தாலோசிப்பார்.

கொழும்பு, திங்கள்

உருளைக்கிழங்கின் விலை ரூத்தலுக்கு நாலுசத வீதம் குறைக்கப்பட்டுள்ளது. இம் மாதம் முதலாம் திகதி தொடக்கம் உருளைக்கிழங்கின் விலை 26 சதமாக்கப்பட்டுள்ளது. இந்திய உருளைக்கிழங்கின் விலை முன்பு போல ரூத்தல் 32 சதமாகவே இருந்துவருகிறது.

மற்றைய உணவுப் பொருள்களின் விலைகளில் எதுவித மாற்றமும் செய்யப்படவில்லை. பம்பாயிலிருந்து வரும் உளுந்தின் விலை ரூத்தல் 51 சதமாக்கப்பட்டுள்ளது.

வரிவிளம்பர விகிதங்கள்

ஜனனம், திருமணம், மரண அறிவித்தல், வீடு வளவு விற்பனவு, தேவை மற்றும் வாங்கவோ, விற்கவோ இது போன்ற சகல அறிவித்தல்களும் 'ஈழநாடு' பத்திரிகையில் வரிவிளம்பரம் செய்ய ஏற்றுக்கொள்ளப்படும்.

முதல் 20 வார்த்தைகளுக்கு ரூ.3-00. மேற்பட்ட ஒவ்வொரு வார்த்தைக்கும் மேலதிகமாக 10 சதம் அறவிடப்படும்.

உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம். நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனாம்.

வைத்தியர் பரிபூரணாநந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

தேவை

திருக்கோணமலையிலுள்ள ஒரு ஹோட்டலுக்கு வெயிட்டர்களும் பையன்களும் தேவை. ஆங்கிலத்தில் உரையாடக்கூடிய ஆற்றல் இருக்கவேண்டும். விபரங்களுக்கு: பெட்டிஎண்23. C/o. ஈழநாடு, யாழ்ப்பாணம்.

தேவை

கொழும்பிலுள்ள ஒரு தமிழ்க் குடும்பத்துக்கு வயது வந்த ஒரு ட்றைவரும் சமையற்காரரும் தேவை. விபரங்களுக்கு: பெட்டி எண் 24. C/o.ஈழநாடு, யாழ்ப்பாணம்.

விற்பனைக்கு

நிலம்: யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதியில் 4வது மைல் கட்டைக்கருகில் (கோப்பாய்) 10 பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு எஸ். செல்வராசா, 25, சப்பல் வீதி, யாழ்ப்பாணம்.

ஞாபகார்த்தம்

அழியா அன்பு நிறை ஸ்ரீ வ. பொன்னுத்துரை அவர்களின் நினைவுககாக—தோற்றம் —24-12-1881. மறைவு — 18-8-60 தாங்கள் பிரிந்த அந்தத் தாங்கொணாத்துயர் நாள் ஓடி மறைந்தும் ஓர் ஆண்டாயிற்று. ஒரு வார்த்தையேனும் கூறாது 'கைலாயம்' சென்றீர்கள். கால ஔஷதம் கவலையைத் தணிப்பினும் தங்கள் உன்னத நினைவு நீடித்து நிலைக்கும். தாங்கள் விட்டுச் சென்ற ஸ்தானத்தை எக்காலத்திலும் நிரப்ப முடியாது. தாங்கள் விட்டுப் பிரிய வேண்டும் என்பது இறைவன் திருவுள்ளம் போலும். இது ஒன்றே எங்கள் ஆறுதல்.

தங்கள் ஆத்மா சாந்தியடைவதாகுக. ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

துன்பமுறும் தங்கள் மனைவியும் மக்களும்.

கூடல், ஆனைக்கோட்டை.

வியாபாரம்பெருக விளம்பரம்செய்க

ஆயுள்வேத அரிய சாதனை

புற்று நோய்க்கு 'யோகீஸ்வர ரசம்' தமிழ்வைத்தியமுறைப்படி புற்று நோயை வேரறுக்க முடியுமென்பதை செயல்மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டோர் எம்மிடம் சிகிச்சை பெற்றுக் குணமடைந்துளர். தாய்க்குலத்தாருக்கு ஒரு வரப்பிரசாதமாக கிடைத்துள்ள அரிய மருந்து பெரும்பாடு நிவாரணி." தாமதமின்றிக் கலந்தாலோசியுங்கள்.

பொ. செல்லையா
ஆயுள்வேத வைத்தியர்,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

வாழ்க்கைச் செலவைக் குறைக்க பாவனையாளர் சங்கம்

உனவட்டுனு, திங்கள்

கொள்ளைலாபமடிக்கும் வியாபாரிகளுக்கெதிராக நடவடிக்கை எடுக்கவும் வாழ்க்கைச் செலவைக் குறைப்பதில் அரசாங்கத்துக்கு உதவியளிக்கவும் உனவட்டுனுவிலுள்ள மக்கள், பாவனையாளர் சங்கமொன்றை அமைத்துள்ளார்கள்.

இச்சங்கத்தின் தலைவர் திரு. டி. ஏ. கருணசேனு தெரிவித்தாவது:-

வாழ்க்கைச் செலவு உயர்ந்துள்ள இவ்வேளையில் கொள்ளைலாபமடிக்கும்வியாபாரிகளை அரசாங்கத்துக்குத்தெரியப்படுத்துவது வாழ்க்கைச் செலவை எப்படிக்குறைப்பது என்று அரசாங்கத்துக்கு ஆலோசனை கூறுவதும் ஒவ்வொரு நல்ல பிரஜையின் கடமையாகும்.

தமிழ்க்காங்கிரசின் தீவிரபிரசாரத் திட்டம்
வாலிபர்முன்னணி அறிக்கை

உடுப்பிட்டி, சனி

வெள்ளிக்கிழமை பிற்பகல் சுமார் நாலுமணிநேர ஆலோசனையின் பின் அகில இலங்கை தமிழ்க்காங்கிரசின் வாலிபர் முன்னணிச்செயற்குழு ஓர் அறிக்கையைப் பத்திரிகைகளுக்கு விடுத்தது. கூட்டத்தில் பல தமிழ்க்காங்கிரஸ் பிரமுகர்கள் கலந்துகொண்டனரென்றும், அவசரகாலச்சட்டம் முடிந்ததும், தமிழ்க்காங்கிரஸ் தமிழ் பேசும் மக்களின் மத்தியில் தீவிர பிரசாரத்தில் இறங்குமென்றும் தெரிகிறது இக்கூட்டத்திற்குப் பத்திரிகை நிருபர்கள் அனுமதிக்கப்படவில்லை.

தம்பதிகள் சம்மதத்தின் பேரில் விவாக ரத்து
கமிஷன் அறிக்கையை அரசாங்கம் ஆராயும்

கொழும்பு, ஞாயிறு

தம்பதிகள் இருவரும் சம்மதம் தெரிவித்தாலே விவாக ரத்து பெற்றுக்கொள்ளலாம் என்றும் அவர்கள் 21 வயதுக்கு மேற்பட்டவர்களாகவும் விவாகமாகி 3 வருடங்கள் நிறைவேறியிருக்கவேண்டுமென்றும் ஒரு வருடமாவது இருவரும் பிரிந்து வாழ்ந்திருக்கவேண்டுமென்றும் விவாக, விவாகரத்துக்கமிஷன் தனது அறிக்கையில் வெளியிட்டுள்ளது-

இந்த அறிக்கையை கைத்தொழில் உள்நாட்டுக் கலாசார மந்திரி அரசாங்கத்திடம் அதன் அங்கீகாரத்துக்காக சமர்ப்பிப்பார்.

விவாக, விவாகரத்துக் கமிஷனின் ஏனைய சிபார்சுகள் வருமாறு:-

கணவன் மனைவியில் யாராவது ஒருவர் கொலைக் குற்றவாளியாக இருந்தால் அது காரணமாக விவாகரத்துச் செய்ய சட்டம் இடமளிக்கும் தொடர்ந்து ஐந்துவருடகாலமாக மாற்றமுடியாத பைத்தியமாகக் கணவனோ அன்றி மனைவியோ இருந்தால் விவாகரத்துச் செய்ய சட்டம் இடமளிக்கும். ஒரு பெண் தொடர்ந்து ஏழு வருடமாகக் காணாது போயிருந்தால் விவாகரத்துக்கு இடமுண்டு. ஆனால் இதற்குப் போதிய ஆதாரம் வேண்டும். ஐந்து வருடகாலமாகக் கணவன் மனைவி பிரிந்திருந்த விடத்தும் விவாகரத்துக்கு இடமுண்டு.

ஆண்கள் விவாகமாவதற்குரிய வயதை 16 லிருந்து 18 ஆக உயர்த்தவேண்டும் எனவும் பெண்களின் வயது 12லிருந்து 16 ஆக உயர்த்தப்படவேண்டும் எனவும் கமிஷன் சிபார்சு செய்துள்ளது.

சகோதர முறையானவர்கள் மணம் செய்துகொள்ளும் வழக்கம் நீக்கப்படல் வேண்டுமெனவும் அறிக்கையிற் கண்டிருக்கின்றது.

சம்பளம் வேண்டாம்
திரு. குமாரசாமியின் முன்மாதிரி

கொழும்பு, திங்கள்

இலங்கை பெட்ரோலியம் கூட்டு ஸ்தாபனத்தின் உப தலைவராகக் கடமையாற்றுவதற்காக தனக்கு எவ்வித சம்பளமும் வேண்டாமென்றும், சன்மானம் எதுவுமில்லாமல் பணிபுரியத் தாம் விரும்புவதாகவும் திரு. ஈ. ஆர். எஸ். ஆர். குமாரசாமி உனவு வர்த்தக அமைச்சர் திரு. டி. பி. இலங்கரத்தினவுக்கு எழுதியுள்ளார்.

தனக்குக் கொடுக்கக்கூடிய சம்பளப் பணத்தைக் கூட்டு ஸ்தாபன ஊழியரின் சேம நல நிதியில் சேர்த்துக்கொள்ளலாமென்றும் இந் நிதியைக் கூட்டு ஸ்தாபன சபையின் சட்ட திட்டங்களுக்கமைய உபயோகிக்கலாமென்றும் திரு குமாரசாமி யோசனை கூறியுள்ளார்.

அரசாங்க கூட்டு ஸ்தாபனத்தைச்சேர்ந்த ஒருவர் சம்பளம் வேண்டாமென்று பணியாற்ற முன்வந்தது இதுதான் முதல்தடவை.

ஆசிரியருக்கு பாராட்டு விழா

அளவெட்டி, திங்கள்

அளவெட்டி தெற்கு அ. மி. பாடசாலையில் தலைமை ஆசிரியராகக் கடமையாற்றி, புங்குடுதீவு மேற்கு அ. மி. பாடசாலையில் கடமையாற்றச் செல்லும் தலைமையாசிரியர் திரு. யோ. சா. செல்வராசாவின் சேவை நலப் பாராட்டுவிழா பாடசாலை மண்டபத்தில் புதிய தலைமை ஆசிரியர் திரு. வி. செல்லப்பா தலைமையில் பெற்றோர், ஆசிரியர், மாணவர்களால் கொண்டாடப்பெற்றது.

கைத்தொழில் இலாகாவுக்கு 300க்கு மேற்பட்ட மனு

கொழும்பு, ஞாயிறு

சிறு கைத்தொழில்கள் நிறுவுவதற்கென கைத்தொழில் இலாகாவுக்கு 300க்கு மேற்பட்டவர்கள் மனுச் செய்துள்ளார்கள். கைத்தொழில் அபிவிருத்திக் கிளை இந்த விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்து வருகின்றது.

சப்பாத்து உற்பத்தித் தொழில், கண்ணாடிப்பொருள் உற்பத்தி, ரப்பர் பொருள்கள் உற்பத்தி போன்றபலசிறுகைத்தொழில்களுக்கே அதிக தொகையானோர் விண்ணப்பம் செய்துள்ளனர். இச் சிறு கைத்தொழிலுக்கும் அநேகர் விண்ணப்பித்திருப்பதால், புதிய சிறு கைத்தொழிலை ஆரம்பிப்பதில் எந்த விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அளிக்கலாம் என்று தீர்மானிப்பது, இலாகாவுக்குச் சிரமமாக இருக்கிறது.

விண்ணப்பங்கள் யாவற்றையும் ஏற்று உதவி புரிந்தால், இப் பொருள்கள் தேவைக்குமிஞ்சி உற்பத்தி செய்ய நேரிடும் என்பதாலும் அவ்வாறு உற்பத்தி அதிகரிக்குமிடத்து புதிய கைத்தொழில்கள்நஷ்டத்துக்குள்ளாகக்கூடுமென்பதாலும் விண்ணப்பங்கள் முழுவதையும் இலாகா ஏற்றுக்கொள்ள விரும்பவில்லை.

மழை காரணமாக நெற்பயிர் சேதம்

மாத்தளை, திங்கள்

கடந்த ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் தொடர்ந்துபெய்த மழை காரணமாக மாத்தளைப் பகுதியிலுள்ள 90 சதவீதத்துக்கு மேலான நெற்பயிர் சேதமடைந்துள்ளதுஎன பகுதி விவசாய அபிவிருத்தி அதிகாரியால் மதிப்பிடப்பட்டுள்ளது.

சுமார் 29,000 ஏக்கர் நிலப்பரப்பில் நெல் பயிரிடப்பட்டிருந்தது. இந்த பயிர் சேதம் அப்பகுதியிலுள்ள விவசாயிகளைப் பெரிதும் பாதித்துள்ளது

உண்ணாவிரதம் நிறுத்தப்பட்டது

கொழும்பு, திங்கள்

ஹெந்தளை தொழு நோயாளர் ஆஸ்பத்திரியில் பெண்கள் வார்ட்டில் 70 நோயாளர் ஆரம்பித்த உண்ணாவிரதம் சுகாதார இலாகா உதவி அதிபரின் முயற்சியால் நேற்றுக் காலை நிறுத்தப்பட்டது.

சென்ற நான்கு வருடங்களாக இரவில் கங்காணிமார் சேவை செய்யாமல் நிறுத்தப்பட்டிருந்ததை ஆட்சேபித்தும் மீண்டும் இரவில் கங்காணிமார் சேவைசெய்ய வேண்டுமென்று கோரியும் இந்த 70 நோளாளரும் சென்ற சனிக்கிழமை தொடக்கம் உண்ணாவிரதம் ஆரம்பித்ததாகக் கூறப்படுகிறது. இந்த ஆஸ்பத்திரியில் 650 நோளாளர்கள் உள்ளனர்.

உண்ணாவிரதம் நிறுத்தப்பட்டது. இரவில் கங்காணிமார் வேலைசெய்தனர்.

தலைமையாசிரியர்கள் கூட்டம்

மன்னார், ஞாயிறு

மன்னார் மாவட்ட வித்தியாதிகாரி திரு எஸ். கனகசபாபதி, சேவியர்ஸ் கல்லூரி மண்டபத்தில் மாவட்டப் பாடசாலைத் தலைமையாசிரியர்களின் கூட்டம் ஒன்றை ஏற்படுத்தியிருந்தார். பாடசாலை வளர்ச்சிக் குரிய பல் வேறு விஷயங்கள் இக்கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டன.

மலைநாட்டில் ஈழநாடு ஏஜண்டுகள்

கண்டி
முஸ்லிம் ஹோட்டல், கண்டி.
செல்வன் கபே, கட்டுக்கலை, கண்டி.
விமலா ஸ்டோர்ஸ், கொழும்பு வீதி, கண்டி.
ஜெகஜோதி அன் கோ., கண்டி

கம்பளை
ஏ. எஸ். கனகரட்ணம், 3/5, நுவரெலியா ரோடு, கம்பளை.
எஸ். பி. செல்லமுத்துப் பிள்ளை, கம்பளை.

உலப்பனை
தனலெட்சுமி ஸ்டோர்ஸ், மாவத்துர.
லெட்சுமி ஸ்டோர்ஸ், மாவத்துர.

நாவலப்பிட்டிய
எஸ். ஞானப்பிரகாசம் முருகேசப்பிள்ளை அன் சன்ஸ், நாவலப்பிட்டிய.

கினிகத்தென
எம். சின்னத்துரை, கினிகத்தென.

வட்டவளை
பி. எஸ். ஏ. முத்தரசு சேர்வை, வட்டவளை.

நோர்ட்டன்
ஏ. பிச்சையாபிள்ளை, நியூஸ் ஏஜண்ட், நோர்ட்டன்பிரிஜ்.

கங்குவத்தை
ஸ்ரீ முருகன் ஸ்டோர்ஸ், கங்குவத்தை.

மஸ்கெலியா
நைன்சா ஸ்டோர்ஸ், மஸ்கெலியா.
சென்ட்ரல் மெடிக்கல் ஸ்டோர்ஸ், மஸ்கெலியா.

நோர்வுட்
ஸ்ரீ முருகன் ஸ்டோர்ஸ், நோர்வுட்.

டிக்ஓயா
ஏ. நடேசபிள்ளை, மருந்துக்கடை, மெயின் வீதி, டிக்ஓயா.

ஹட்டன்
ஸ்ரீ ரஞ்சனி ஸ்டோர்ஸ், ஒட்டாரி எஸ்டேட்.
இம்பீரியல் பிரஸ், ஹட்டன்.
கே. எம். கறுப்பையா, ரோக்வுட் தோட்டம்.

புசல்லாவ
எம். ஏ. செல்லமுத்து, செல்வம் ஸ்டோர்ஸ், புசல்லாவ.

நுவரெலியா
எஸ். விருத்தாசலம், நியூவிக்டோரியா ஹவுஸ், றீகல் பில்டிங், நுவரெலியா

பதுளை
ஜானஹிராம் கம்பனி, 122, லோவர் வீதி, பதுளை.

தெல்தெனி
ஸ்ரீ லங்கா ஸ்டோர்ஸ், தெல்தெனியா.

ரங்கலை
பி. எம். சேகு மொஹமட், டக்குவாரி பஜார், ரங்கலை.

ஏவாடெட்
கணேசன் ஸ்டோர்ஸ், ஏவாடெட்.

தெல்தொட்ட
சண்முகநாதன் ஸ்டோர்ஸ், தெல்தொட்ட.

விசாரணை இரகசியமாகவே நடைபெறும்

இந்திய அதிகாரி மீதுள்ள குற்றச்சாட்டு; ராணுவ நீதிமன்றம் அறிவிப்பு

புதுடில்லி, செப். 3

கிழக்கு பாகிஸ்தான் தலைநகரான டாக்காவில் ராணுவ நீதிமன்றத்தில் இந்திய அதிகாரியான லெப்டினன்ட் கேணல் பட்டாச்சார்யா மீது குற்றம் சாட்டித்தொடரப்பட்ட வழக்கு விசாரணையை ஒத்தி வைக்கவேண்டுமென்ற கோரிக்கையை அந்த நீதிமன்றம் நிராகரித்துவிட்டதுடன் விசாரணை இரகசியமாகவே நடைபெறுமென்றும் அறிவித்துவிட்டது.

பட்டாச்சார்யாவின் சார்பில் இந்திய வழக்கறிஞர் ஒருவர் ஆஜராகி வாதாட அனுமதிக்க வேண்டுமென்ற கோரிக்கையையும் அந்த நீதிமன்றம் நிராகரித்துவிட்டது.

இப்பொழுது பாகிஸ்தான் அரசாங்கம் நியமித்த ஒரு வழக்கறிஞர்தான் பட்டாச்சார்யா சார்பில் ஆஜராகிறார்.

ராணுவ நீதிமன்றம் விஷயத்தில் கிழக்குப்பாகிஸ்தான் அரசாங்கம் எதுவும் செய்யமுடியாதென்று கிழக்குப்பாகிஸ்தானிலுள்ள இந்திய உதவி ஹைகமிஷனரிடம் கிழக்குப் பாகிஸ்தான் அரசாங்கம் அறிவித்துவிட்டது.

பட்டாச்சார்யா மீது நடைபெறும் விசாரணையை ஒத்திவைக்குமாறும் அவர் சார்பில் அவர் விரும்பும் வழக்கறிஞர் ஆஜராவதற்கு அனுமதியளிக்குமாறும் உதவி ஹைகமிஷனர் கிழக்குபாகிஸ்தான் அரசாங்கத்தைக் கேட்டிருந்தார்.

துஷ்பிரயோகம் செய்கின்றனர்

மேற்குநாடுகள் மீது ரஷ்யா புகார்

மாஸ்கோ, செப். 3

பெர்லின் விமானப் போக்குவரத்து உரிமையை மேற்கு நாடுகள் துஷ்பிரயோகம் செய்துவருவதாக சோவியத் ரஷ்யா மீண்டும் குற்றஞ்சாட்டியுள்ளது.

அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய மூன்று நாடுகளுக்கும் சோவியத் யூனியன் அனுப்பியுள்ள ஆட்சேபனைக் குறிப்பில் இவ்வாறு குற்றம்சாட்டப்பட்டுள்ளது. குறிப்பின் முழு விபரமும் இன்னும் வெளியிடப்படவில்லை.

இக்குறிப்பு மாஸ்கோவிலுள்ள அமெரிக்க, பிரிட்டிஷ், பிரஞ்சு ஸ்தானிகர்களுக்கு சோவியத்வெளிவிவகார அமைச்சினால் கொடுக்கப்பட்டது.

மீண்டும் கைது செய்ய திட்டமாம்

ஷோம்பே கூறுகிறார்

எலிஸபெத்வில்லி, செப். 3

தம்மை மீண்டும் கைது செய்வதற்கு காங்கோ மத்திய அரசாங்கத்தினர் திட்டமிட்டுள்ளதாக கடாங்கா ஜனாதிபதி திரு. ஷோம்பே தெரிவித்தார்.

எலிஸபெத்வில்லிக்குச் சமீபத்திலுள்ள ஆபிரிக்க மக்கள் மத்தியில் காங்கோ மத்திய அரசாங்கத்தினர் பீதியை ஏற்படுத்தியுள்ளதாக திரு. ஷோம்பே தெரிவித்தார்.

கடாங்காவின் சுதந்திரத்துக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு எதிர்ப்பு சக்திகள் முயற்சி செய்துவருவதாக அவர் கூறினார். என்ன நேர்ந்தாலும் நாட்டு மக்களைப் புறக்கணித்துவிட்டுத் தலைநகரிலிருந்து தாம் வெளியேறப்போவதில்லையென்று திரு. ஷோம்பே கூறினார்.

மேற்குநாடுகளுக்கு உரிமை இல்லை

ரஷ்யா அறிவிப்பு

மாஸ்கோ, செப். 4

கிழக்கு ஜேர்மன் போக்குவரத்துப் பாதையை உபயோகிக்க மேற்கு நாடுகளுக்கு உரிமை கிடையாது என்று சோவியத் யூனியன் அறிவித்துவிட்டது.

அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய மூன்று அரசுகளுக்கும் சென்ற சனிக்கிழமை சோவியத் ரஷ்யா அனுப்பிய குறிப்பில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கு நாடுகளின் விமானப் போக்குவரத்து உரிமையைத் தடை செய்தால் அது ஆக்கிரமிப்பு நடவடிக்கையாகக் கருதப்படும் என்று மேற்கு அரசுகள் சோவியத்யூனியனுக்குத் தெரிவித்ததற்குப் பதிலாக சோவியத் யூனியன் இப்பொழுது அனுப்பிய குறிப்பில் "மேற்கு நாடுகளுக்கு உரிமை கிடையாது" என்று தெரிவித்துள்ளது.

நைரோபியில் இந்திராகாந்தி

நைரோபி, செப். 4

கிழக்கு ஆபிரிக்காவில் சுற்றுப்பிரயாணம் செய்துகொண்டிருந்த திருமதி இந்திரா காந்தி தமது சுற்றுப்பிரயாணத்தை முடித்துக்கொண்டார். நைரோபியில் நேற்று ஒரு பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டு அவர் பேசினார். ஆபிரிக்கத் தலைவர்களின் கீழ எல்லா இன மக்களும் சமவாழ்வு வாழ்வார்களென்று அவர் நம்பிக்கை தெரிவித்தார். இக்கூட்டத்தில் திரு. ரொம்மொபோயா பேசுகையில் ரஷ்யாவுக்கும் அமெரிக்காவுக்கும் இந்தியப் பிரதமர் நேரு விஜயம் செய்வதைவிட ஆபிரிக்காவுக்கு விஜயம் செய்வது அதிக பயனுள்ளதாக இருக்கும் என்று கூறினார்.

புதுவகை நெல்

கோவையில் ஆராய்ச்சி

கோயமுத்தூர், செப். 3

இங்குள்ள விவசாய ஆராய்ச்சி நிலையத்திற் கண்டுபிடிக்கப்பட்ட 'கோ-30" என்றநெல் சாக்குபடி விருத்தி செய்வதற்காக விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது.

இந்த மத்தியகாலப் பயிரைச் சோதித்தில் ஏகராவுக்கு 3000 ரூத்தல் நெல் கிடைக்கிறது.

---

200 பேர் மயக்கம்

குளோரின் வாயு விளைத்த தொல்லை

கான்பூர், செப் 3

கான்பூரில் ஜன நெருக்கமுள்ள ஒரு பகுதியில் குளோரின் வாயு பரவியதால் சுமார் 200 பேர் மயக்கமடைந்து ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

பரிசீலனைசெய்ய ரஷ்யா தயார்

மாஸ்கோ, செப். 4

சர்வதேசப் பிரச்சினை சம்பந்தமாக கிழக்கு, மேற்கு நாடுகள் பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென்று மேற்கு நாடுகள் விரும்பினால் அதுபற்றிப் பரிசீலனை செய்ய சோவியத் யூனியன் தயாராக இருக்கிறது என்று சோவியத் பிரதமர் குருஷ்சேவ் தெரிவித்துள்ளார்.

இத்தாலியப் பிரதமர் திரு பான்பானிக்கு எழுதியுள்ள ஒரு கடிதத்திலேயே திரு. குருஷ்சேவ் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சர்வகட்சி மகாநாடு தீர்மானம்

புதுடில்லி, செப். 4

புதுடில்லியில் நடைபெற்ற சர்வகட்சி மகாநாடு ஒன்று இந்தியப் பிரதேசத்திலிருந்து சீனப்படைகள் வெளியேறவேண்டுமென்று கேட்டுக் கொண்டும் பாகிஸ்தானுக்கு அமெரிக்கா ஆயுத உதவியளிப்பதைக் கண்டித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றியது.

பலூபா மக்கள் தஞ்சம்

எலிஸபெத்வில்லி, செப். 4

காங்கோவின் காசாய் மாகாணத்திலிருந்து நூற்றுக்கணக்கான பலூபா சாதியினர் ஐ. நா. முகாம்களில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

அல்ஜீரிய சம்பவங்கள் பற்றி விசனம்

அல்ஜியர்ஸ், செப். 4

அல்ஜீரிய நகரங்களில் சமீபத்தில் நடந்த சம்பவங்கள் மிகவும் வருத்தத்தை விளைவிக்கக் கூடியவை என அல்ஜீரிய தற்காலிக அரசாங்கத்தின் தலைவர் கூறினார். குடியேற்றவாசிகள் ஐரோப்பியரை அல்ஜீரியர்களுக்கெதிராகத் தூண்டி விடுகிறார்களென்றும் அவர் குறிப்பிட்டார்.

அடுத்த வாரம் குவாய்த்தில் அரபுப் படைகள்

லண்டன், செப். 4

அடுத்த வாரம் நடுப்பகுதியில் குவாய்த்திலுள்ள பிரிட்டிஷ் படைகளுக்குப் பதிலாக அராபியப் படைகள் பொறுப்பேற்கும் என நம்புவதாய் அரபு லீக் பொதுக் காரியதரிசி கூறினார். ஐக்கிய அராபியக் குடியரசு, ஜோர்டான், சூடான், சாவூதி அராபியா, டூனிஸியா ஆகிய நாடுகளின் படைகள் குவாய்த்தில் இடம்பெறும்.

---

372 அகாலிகள் கைது

சண்டிகர், செப். 4

அமைதிக்குப் பங்கம் நேரிடுமென்று அஞ்சி, கடந்த ஐந்து தினங்களில் பஞ்சாபில் பல்வேறு இடங்களில் மொத்தம் 40 கம்யூனிஸ்டுகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பஞ்சாபி சுபா கிளர்ச்சியில் கலந்து கொள்ள கம்யூனிஸ்டுகள் முடிவு செய்துவிட்டதாக நேற்று முதல் மந்திரி திரு. கய்ரூன் பத்திரிகை நிருபர்களிடம் தெரிவித்தார்.

இதுவரை மொத்தம் 372 அகாலிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். இதைத் தவிர விரும்பத்தகாத நடத்தையுள்ளவர்கள் என்று கருதப்படும் 80 அல்லது 90 பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

குருஷ்சேவுக்கு அடோலா கடிதம்

லியப்போல்ட்வில்லி, செப். 4

பிற நாடுகளின் தலையீட்டிலிருந்து காங்கோவைப் பாதுகாப்பதே தமது பணியாய் இருக்குமென்றும், இதை ரஷ்யா அங்கீகரித்திருப்பது தமக்கு மகிழ்ச்சியை அளித்திருப்பதாயும் காங்கோ மத்திய அரசாங்கப் பிரதமர் திரு. அடோலா ரஷ்யப் பிரதமருக்குப் பதிலளித்திருக்கிறார். திரு. அடோலாவின் அரசாங்கத்தை அங்கீகரித்து திரு. குருஷ்சேவ் அனுப்பிய செய்திக்குப் பதிலளிக்குமுகமாகவே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தென் ஆபிரிக்கா உத்தரவு

கேப்டவுன், செப். 4

தென்னாபிரிக்காவின் கறுப்பர் தலைவர் 5 வருடத்திற்கு தென்னாபிரிக்காவிலும், தென் மேற்கு ஆபிரிக்காவிலும் உரை நிகழ்த்தக் கூடாது என அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

நோயாளர்களுக்கு சினிமா

சென்னை, செப். 4

சென்னையிலுள்ள பெரிய ஆஸ்பத்திரியில் நோயாளர்களுக்கு சினிமாப் படங்கள் காண்பிக்கப்பட்டன.

நோயாளர்களுடன் டாக்டர்கள், நர்சுகள் ஆகியோரும் படம் பார்த்தார்கள். சினிமா ரசிகர் சங்கம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்தது.

டிட்டோ சைப்பிரஸ்செல்வார்

பெல்கிரேட், செப் 4

யூகோஸ்லேவியா ஜனாதிபதி மார்சல் டிட்டோ விரைவில் சைப்பிரசுக்கு விஜயம் செய்வார். பெல்கிரேட்டில் நடைபெறும் நடுநிலைமை நாடுகளின் தலைவர்கள் மகாநாட்டில் கலந்துகொள்ள வந்த சைப்பிரஸ் அதிபர் அதிமேற்றிராணியார் மக்காரியஸ் சைப்பிரசுக்கு விஜயம் செய்யுமாறு மார்ஷல் டிட்டோவுக்கு அழைப்பு விடுத்தார். டிட்டோ இந்த அழைப்பை ஏற்றுக்கொண்டார்.

அமெரிக்க கம்யூனிஸ்ட் தலைவர் காலமானார்

மாஸ்கோ, செப். 3

"அமெரிக்க கம்யூனிஸ்ட் கட்சியின் கௌரவ தலைவர் திரு. வில்லியம்ஸட் பொஸ்டர் மாஸ்கோவுக்கு அருகிலுள்ள ஒரு வைத்தியநிலையத்தில் சென்ற வெள்ளிக்கிழமை காலமானார். அவருக்கு வயது 80. கடுமையான நீண்டகால சுகயீனத்தின்பின் அவர் காலமானார்" என்று சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி தெரிவித்தது.

12,000ஏக்கர் நிலத்தில் பயிர் செய்ய ஏற்பாடு

களுத்துறை, திங்கள்

முடிக்குரிய 12,000 ஏக்கர் காட்டில் பனைவருவாய் தரக்கூடிய பயிர்களை விளைவிப்பதற்கான ஏற்பாடு இன்று ஆரம்பமாகிறது.

அரசாங்கத்தால் உருவாக்கப்பட்ட தேசிய தொண்டர் படை இயக்கத்தால் ஆரம்பிக்கப்படும் முதல் வேலை இது.

8,000 ஏக்கர் நிலத்தில் உணவுப் பயிர்கள் பயிரிடவும் 4,000 ஏக்கரில் ரப்பர் பயிரிடவும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக காணி அபிவிருத்தி இலாகா அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

எம். பி. க்களுக்கும் மந்திரிகளுக்குமே புதிய பட்ஜட்

ஜாஎலை, திங்கள்

"புதிய 'பட்ஜட்' எம். பி. க்களுக்கும், மந்திரிகளுக்குமே இலாபமளிப்பதாக இருக்கிறது. அபிவிருத்தி வரியிலிருந்து கூட இவர்களுக்கு விலக்களிக்கப்பட்டுள்ளது. நாட்டிலுள்ள ஏழை மக்களை இது பெரிதும் பாதிக்கின்றது."

இவ்வாறு சுன்டிஅம்பலாமா கிராமச் சபையின் மாதாந்தக் கூட்டத்தில் புதிய வரவு செலவுத் திட்டத்தை ஆட்சேபிக்குமுகமாகக் கொண்டுவரப்பட்ட பிரேரணையின் போது திரு. ஹென்றி கருணரத்ன கூறினார்.

அவர் மேலும் பேசுகையில், புதியவரிகள் ஒவ்வொன்றும் ஏழைகளையும் தொழிலாளர்களையுமே பாதிக்கின்றது என்றார்.

இந்த பிரேரணையை எதிர்த்துப் பேசிய திரு. எச். எஸ். திஸரா கூறியதாவது:-

புதிய வரவுசெலவுத்திட்டம் ஒரு சோஷலிஸத்திட்டம். வெளிநாட்டு, உள்நாட்டு முதலாளி வர்க்கத்துக்கும் கள்ளச் சந்தைக்காரர்களுக்கும் எதிராகவே இத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இதன் மீது குற்றம் சுமத்துவதைவிட அரசாங்கத்துடன் எல்லோரும் ஒத்துழைத்து இதை செயல்படுத்த உதவவேண்டும்.

பிரேரணைக்கு ஆதரவாக 5 வாக்குகளும் எதிராக 3 வாக்குகளும் கிடைத்தன.

வீதி அருகில் பிரேதம்

அடையாளம் கண்டுபிடிக்கப்பட்டது

மன்னார், ஞாயிறு

மன்னார் மதவாச்சி வீதியில் 19-ம் கட்டையருகில் இனம் கண்டு கொள்ள முடியாது அழுகிக் கிடந்த பிரேதத்தை இரகசியப் பொலிஸைச் சேர்ந்த சார்ஜன்ட் வி. நவரத்தினம் அடையாளம் கண்டுபிடித்தார்.

இறந்தவர் உடுத்திருந்த உடையில் 1/1 என்ற சலவை அடையாளம் காணப்பட்டது. இதிலிருந்து இறந்தவரது உடைகளைச் சலவை செய்து வந்தவர் மட்டுவில் தெற்கைச் சேர்ந்த வி. கந்தையா என்பவர் எனத் தெரியவந்தது.

இறந்தவர் நுணாவில் கிழக்கைச் சேர்ந்த புரக்டர் பாலகிருஷ்ணன் என்பவரின் பேரனாகிய ஐயம்பிள்ளை கந்தையா ஆவர்.

இவர் 8-4-61 மடுத் தேவாலயத்துக்குப் போவதாகச் சென்றாரெனவும் 19-ம் கட்டையில் கழுத்து வெட்டப்பட்டு கை கால்களில் குத்துக் காயங்களுடன் காணப்பட்டாரெனவும் அறிவிக்கப்படுகிறது.

மேலதிக நேரவேலை ஊதியம் வழங்குவதில் ஒழுங்குமுறையில்லை

—திறைசேரி அறிவிப்பு

கொழும்பு, திங்கள்

அரசாங்கசேவை உத்தியோகத்தர்கள் காலியாக இருக்கும் ஸ்தானங்களில் மேலதிக நேரவேலை செய்யும் போது அவர்களுக்கு ஊதியம்வழங்குவதில் சரியான ஒழுங்குமுறை கையாளப் படுவதில்லையென சகல நிரந்தரக்காரியதரிசிகளுக்கும் இலாகா அதிகாரிகளுக்கும் திறைசேரி தெரிவித்துள்ளது.

கிராமத்திற்கு ஒரு நூல்நிலையம்

கொழும்பு, திங்கள்

ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு நூல்நிலையம் ஆரம்பிப்பதற்கான திட்டமொன்றை கா-ாரவிவகார அமைச்சு தயாரித்துவருகிறது.

மணிவாக்கு

இன்பங்களைப் பெற முயல்வதிலும், இலட்சியங்களைப் பெருக்க முயல்வதே நலம்.

—ஆவ்பரி

ஈழநாடு
EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு ஆவணி மீ 20உ (5-9-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone: 389.

சர்வகலாசாலை வெளி மாணவர்கள்

அடுத்த வருடத்திலிருந்து இலங்கை சர்வகலாசாலையில் வெளி மாணவர்களை சேர்த்துக் கொள்ளுவதில்லை என்று செனட் கமிட்டி செய்துள்ள தீர்மானத்தைக்குறித்து யாரும் வியப்படையமாட்டார்கள்.

வருடத்தில் சுமார் 400 புது மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளவே, பேராதனையில் வசதிகள் உள்ளன. ஆனால் இலவசக் கல்வி முறை காரணமாகவும், சுயபாஷை மூலம் கல்வி கற்க வாய்ப்பு இருப்பதாலும் பல்லாயிரக்கணக்கான மாணவ மாணவிகள் பிரவேசப் பரீட்சைக்குத் தோன்றி, பலர் சித்தி பெறுகின்றனர். சித்தி பெறுகிறவர்களுக்கெல்லாம் இச் சர்வ கலாசாலையில் இடமில்லை. அதனால் அதிகப்படி புள்ளிகள் வாங்குகிற முதல் 400 பேர்களை மட்டும், சர்வகலாசாலையில் சேர்த்துக் கொண்டு மற்றவர்களுக்கெல்லாம் இடமில்லை என்று ஒதுக்கிவந்தனர்.

அரசியல் வாதிகள் இதில் தலையிட்டு, பரீட்சை தேறியவர்களுக்கெல்லாம் சர்வகலாசாலையில் இடமளிக்க வேண்டுமென்றும், இன்றேல், சர்வகலாசாலை மான்யத்தை அனுமதிக்க முடியாதென்றும் பயமுறுத்தவே சர்வகலாசாலை சபையினர், பரீட்சையில் தேறிய மற்ற சுமார் 700 பேர்களையும் வெளி மாணவர்களாகச் சேர்த்துக் கொள்வதென முடிவு செய்து இவ்வாண்டு அப்படியே செய்தனர்.

இந்த ஏற்பாடு இரு விதங்களில் பாதகம் விளைத்தது. ஒரே சர்வகலாசாலையில் படிக்கும் மாணவர்களை 'உயர்சாதி', 'தாழ்ந்த'சாதி என்று பிரித்து வேற்றுமையை ஏற்படுத்தியுள்ளதுடன், வெளிமாணவர்களுக்கு சர்வகலாசாலையில் சம வசதிகள் இல்லாமல் அவர்கள் சங்கடப்பட நேரிட்டது. பல ஆட்சேபங்களும் கிளம்பின. முன்னர் வெளி மாணவர்களை சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்ட அதே அரசியல் வாதிகள் அந்த ஏற்பாட்டை மாற்றவேண்டுமென்று கூற ஆரம்பித்துவிட்டனர். இவ்வாண்டில் சேர்ந்தவர்கள் தொடர்ந்து 4 ஆண்டுகள் படிக்கலாம். ஆனால் புதிதாக இனி வெளிமாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படமாட்டார்கள்.

என்றாலும் வெளியிலிருந்து படித்தே பரீட்சை எழுதுவதற்கு வாய்ப்பு அளிக்கப்படுமென்றும், இதற்கான புதிய விதிகள் தயாரிக்கப்பட்டு வருவதாயும் கூறப்படுகின்றது. இப்புதிய விதிகள், பரீட்சையில் தேறும் எல்லா மாணவர்களுக்கும் எவ்விதம் சர்வகலாசாலைப்படிப்புவசதிகள் அளிக்குமென்பது இனியே தெரிய வேண்டும்.

ஏராளமானவர்களுக்கு சர்வகலாசாலைப் படிப்பில் ஆர்வமிருந்தும், சேரவசதியற்றிருக்கிறார்கள. இக் குறை தீர புதிய சர்வகலாசாலைகளை ஆரம்பிக்க வேண்டும். வெறும் கலாசார சர்வகலாசாலைகளால் நாட்டுக்குப் பயனில்லை. இஞ்சினீரிங், வைத்தியம், கைத்தொழில் முதலியன கற்பிக்கும் ஸ்தாபனங்களே தேவை. அரசாங்கம் பணமில்லை என்றுகூறி அசமந்தமாக இருக்கலாம். பொதுமக்களும், சிறப்பாக தமிழர்களும் திருகோணமலையில் இஞ்சினீரிங், விஞ்ஞானம் இவற்றைக் கற்பிக்கும் சர்வகலாசாலையை ஆரம்பித்து நடத்த மும்முரமான ஏற்பாடு செய்து வருகின்றனர். அதற்கு தாமதமின்றி அங்கீகாரமளிப்பதால், இந்தப் பிரச்சினை குறைவதுடன் நாட்டின் கல்வி, பொருளாதார முன்னேற்றத்துக்கும் வழி செய்ததாகும். இந்தியா முதலிய வெளி நாடுகளுக்குச் சென்று படிக்கவும், செலாவணியை அனுமதிக்காத நிலையில், இவ்வித ஏற்பாடு அதிக அவசரமும் முக்கியமுமாகிறது.

தோட்டப் பள்ளிக் கூடங்களின் பரிதாப நிலை

கல்வி விஷயத்தில் பாகுபாடு எதற்கு?

லங்கா தோட்டத் தொழிலாளர் சங்கத் தூதுக்குழு கமிஷனுக்கு அளித்த சாட்சியம்

இலங்கையிலுள்ள சகல குழந்தைகளுக்கும் அளிக்கப்படும் கல்வி வசதிகள் தோட்டப் பள்ளிக்கூடங்களிற் பயிலும் குழந்தைகளுக்கும் அளிக்க வேண்டுமெனத் தேசியக் கல்வி கமிஷன் முன் சாட்சியமளித்த லங்கா தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் தூதுக் குழு சுட்டிக் காட்டியுள்ளது.

இத் தூதுக் குழுவுக்கு செனட்டர் டொரிக்டி' சூசா தலைமை வகித்தார். சங்கச் செயலாளர் திரு. எஸ். செல்லையா, திரு. ஜே. வணிகதுங்க உட்படப் பலர் இத் தூதுக் குழுவில் அங்கம் வகித்தனர்.

இந்நாட்டின் கல்வி முறையில் தோட்டப் பாடசாலைகளும் முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றன. இலவசக் கல்வி முறைக்கு முன்பு தோட்டக் குழந்தைகளுக்கு ஒரு கல்வி முறையை முதலாளிமார் கொடுக்க வேண்டுமென கட்டாயப்படுத்தியிருந்தனர். தோட்டக் குழந்தைகளுக்கு ஒரு வித கல்வி முறையையும் அதற்கான ஓரளவு பண உதவியையும் அரசாங்கம் கொடுத்துதவியது. இப்படி இருந்தும் தொழிலாளரின் குழந்தைகளுக்கு ஒரு உருப்படியான கல்வி முறையை அளிக்கவில்லை.

இலவச கல்வித் திட்டத்தை அங்குரார்ப்பணம் செய்யும் போது தோட்டப் பாடசாலைகளையும் இத்திட்டத்தின் கீழ் கொண்டுவர வேண்டுமென்பதே அரசாங்கத்தின் திட்டம். அதன்படி அந்தப் பொறுப்பு முதலாளிகளின் கையிலிருந்து எடுக்கப்பட்டது. இருப்பினும் அரசாங்கம் தோட்டப்பாடசாலைகளை மெதுவாக எடுக்க வேண்டுமென ஒரு பிரேரணை பிரேரேபிக்கப்பட்டது. அதன்படி முதலாளிகள் பள்ளிக்கூடத்திற்காக ஒரு கட்டிடத்தையும், உபாத்திமார் இருக்க ஒரு வீடும், ஒரு ஏக்கர் நிலமும் அளிக்க வேண்டுமென்றும், அப்படி முதலாளிமார் செய்யத் தவறினால் அரசாங்கம் இந்தப் பணத்தை முதலாளிமார்களிடமிருந்து எடுக்க வேண்டுமெனவும், அப்பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நடைமுறையில்இல்லை

ஆனால் இது நடைமுறையில் கவனிக்கப்படவில்லை. இலங்கையில் உள்ள 879 தோட்டப் பாடசாலைகளில் 24 பள்ளிக்கூடங்கள் மட்டும்தான் இப்போது அரசாங்கபள்ளிக்கூடங்களாக விளங்குகின்றன. இது முதலாளிகளின் தவறுமட்டுமல்ல. அப்போது (1954) பதவியிலிருந்த கல்வி மந்திரியின் தவறும் என்றே கூற வேண்டும்.

ஆகவே லங்கா தோட்டத் தொழிலாளர் யூனியன் கோருவது என்னவென்றால் அரசாங்கம் உடனடியாக எவ்வித தோட்டப்பாடசாலைகளையும் எடுத்து மற்ற பிள்ளைகளுக்குள்ள வசதிபோல் செய்ய வேண்டுமென்பதே. இந்த பள்ளிக்கூடங்களை எடுக்காததற்கு சில காரணங்கள் சொல்கிறார்கள். முதலாவது காரணம் இப்பள்ளிக்கூடங்களிற் கல்வி பயிலும் மாணவர்களில் அதிகமானோர் பிரஜா உரிமையற்ற பிள்ளைகள் என்பது. பிரஜா உரிமைக்கும் கல்விக்கும் சம்பந்தமில்லையென்று நாங்கள் கூறுகின்றோம்.

கல்வி ஒரு மனித உரிமை. இதில் பாகுபாடு காண்பிக்கக் கூடாது. மேலும் பிரஜா உரிமை விஷயம் இன்னும் முடிவு செய்யப்படவும் இல்லை. அதுமட்டுமல்ல; இந்த பிரஜா உரிமைச்சட்டம் உலகில் வேறு இடங்களில் இல்லாத ஒரு அபூர்வ சட்டமாகவும் இருக்கிறது.

இரண்டாவதாக, இப்பள்ளிக்கூடங்களை எடுத்தால் அரசாங்கத்திற்குப் பணக்கஷ்டம் ஏற்படும் என்று விவாதிக்கப்படுகிறது. தோட்டத்தொழிலாளர் இந்நாட்டின் ஜனத்தொகையில் 9 சத விகிதத்தினர். ஆனால் இவர்கள் இந்நாட்டு வருமானத்தில் 30 சத விகிதம் சம்பாதித்துக்கொடுக்கின்றனர். அதாவது, சுமார் 60 சத விகிதம் தேசிய வருமானத்தைத் தேடிக் கொடுக்கின்றனர். ஆகவே தோட்டத் தொழிலாளர்களை அரசியல் அனாதைகளாக மதிப்பது தவறு.

பாதிக்காது

1947-ம் வருட 26-ம் பிரிவுப்படி முதலாளிமார்கள் பள்ளிக்கூடங்களைக் கட்டிக்கொடுக்கலாம். அவர்களுக்கு ஆதாயம் உண்டு. அவர்கள் அதைச் செய்து தரலாம்.

கடைசியாக தோட்டப்பாடசாலைகளை அரசாங்கம் எடுத்தால் மொழிப்பிரச்சினையையும் பாதிக்குமென்று சொல்கிறார்கள். இது எப்படிப் பாதிக்குமென்று எங்களுக்கு விளங்கவில்லை. அரசாங்க கல்வி சட்டப்படி எல்லாக் குழந்தைகளுக்கும் ஒரே வித கல்வி முறையை அளித்தால் எப்படிப் பாதிக்குமென்று எங்களுக்குப் புரியவில்லை.

தோட்டப்பாடசாலைகள் எவ்வளவு மோசமாக நடைபெறுகிறது என்பதை 1959-ம் ஆண்டு மே மாதம் 31-ந் திகதி வெளியிடப்பெற்ற அறிக்கையில் காணலாம். 875 தோட்டப்பாடசாலைகளில் 864 பள்ளிக்கூடங்கள், தமிழ்ப்பள்ளிக்கூடங்கள். இதில்77,687குழந்தைகள் கல்வி பயில்கின்றார்கள். இவர்களுள் 72,886 பிள்ளைகள் இந்திய வம்சாவளியினரின் பிள்ளைகள்; 71,300 பிள்ளைகள் இந்துக்கள். இப்பள்ளிக்கூடங்களில் 1162 ஆசிரியர்கள் பணியாற்றுகின்றனர். சராசரி ஒரு உபாத்தியாயர் 51 பிள்ளைகளுக்குக் கல்வி ஊட்டுகிறார். அரசாங்கப் பள்ளிக்கூடங்களில் 22—25 சதவீதம் தான் இருக்கிறார்கள்.

தோட்டப்பாடசாலைச் சட்டப்படி 2 மணி நேரம்தான் பள்ளிக்கூடம் நடைபெறவேண்டும். அரசாங்கப் பள்ளிக்

(5-ம் பக்கம் பார்க்க)

ஆசிரியருக்குக் கடிதம்

நல்லூர் கந்தசாமி கோயில் சமய அறிவுப் போட்டி

நல்லூர்க்கந்தசாமி கோயிற் திருவிழா நாட்களிலே, கடந்த நான்கு ஆண்டுகளாகச் 'சமய அறிவுப்போட்டி' ஒன்றை யாழ்ப்பாணம் மாநகரசபை நடாத்திச் சமய அறிவை வளர்த்து வருவது பெரிதும் வரவேற்கக்கூடியது.

இதனை நடாத்துவோர் இப்போட்டி வினாக்களின் சரியான விடைகளைப் பத்திரிகைகள் மூலமாகவோ, அன்றிப் பரிசுகள் அறிவிக்கப்பட்டதன் பின்னர், கோயிலிலோ தெரிவிக்காதபடியால் இதிற்பங்குபற்றுவோர் தாமெழுதிய விடைகளின் சரி பிழைகளை அறியமுடியாமலிருக்கின்றனர்.

மேயரால் நியமிக்கப்படும் மத்தியஸ்தர்கள் குழுவின் தீர்ப்பு முடிவானதாக இருக்கலாம்.

ஆனால், கேள்விகளுக்குரிய சரியான விடைகளைத் தெரிவித்தால்தான் பங்கு பற்றுவோர் தமது விடைகளின் தவறுகளை அறிவதுடன், சரியான பதில்களையும் கண்டு அறிவை விருத்திசெய்யமுடியும்.

ஒரு தொண்டன்

சித்தன்கேணி

தகவல் இலாகா படக்காட்சி

வண்ணார்பண்ணை சிவன் கோவில் மண்டபத்தில், இலங்கை தகவல் இலாகாவின் சினிமா இலவசக்காட்சி சென்ற சனிக்கிழமை நடைபெற்றது. ஏராளமான ஆண், பெண் குழந்தைகள் கூடி சுமார் 2 மணி நேரம் ரஸித்தனர்.

கைத்தறி, மட்பாண்டம் உள்ளிட்டு குடிசைத் தொழில்களை, அழகாகப் படம் பிடித்துக் காட்டினர். ஆனால் விமர்சனம் ஆங்கிலத்தில் இருந்ததால் பலரால் புரிந்துகொள்ள முடியவில்லை. தமிழில் விமர்சனம் இல்லாதது பெரிய குறை. இக்குறையை சீக்கிரத்தில் தகவல் இலாகா அதிபர் தீர்ப்பாரென்றே நம்புகிறேன்.

நல்லூர், கோவில் திருவிழாப் படம் காட்டியதும் "அரோகரா" என்று மக்கள் கோஷம் செய்தார்கள். விமர்சனம் தமிழில் இருந்ததால் பலரும் ரஸிக்க முடிந்தது. இங்கு நடைபெறும் பல கோவில் திருவிழாக்களையும் பல குடிசைக் கைத்தொழில்களையும் படம் பிடித்து ஆங்காங்கே காட்டினால் மக்கள் மிகவும் ரஸிப்பதுடன், உள்நாட்டுக் கைத்தொழில்களை ஆதரிக்கவும் முன்வருவர்.

'அடியார்க்கடியான்'

யாழ்ப்பாணம்

ஐயாறன் எழுதுவது

தெருவழியே நடந்து சென்றேன். பல இடங்களில் ஒட்டப்பட்டுள்ள 'பாவமன்னிப்பு' விளம்பர போஸ்டர்களில் சாணி அடித்திருந்தார்கள். ஏன் என்று புரியவில்லை.

ஒரு நண்பரை விசாரித்தேன். அவர் சிரித்துவிட்டு, இங்கு இரு சினிமா கட்சிகள் இருப்பதாயும், சிவாஜி கட்சிக்கு மாறான எம். ஜி. ஆர் கட்சியினர் தங்கள் எதிர்ப்பைத் தெரிவிக்க இப்படிச் செய்திருப்பதாகவும் கூறினர். இது உண்மைதானா?

இது எப்படியாயினும் நமது எதிர்ப்பைத் தெரிவிக்க நாம் இந்த முறையைக் கையாளுவது நமது மதிப்பையும் பெருமையையும் உயர்த்தாது எதிலும் கருத்து வேற்றுமைகள் ஏற்படுவது சர்வ சகஜம். எதிர்ப்பை நாகரீகமான முறையில் தெரிவிப்பதே நமது பண்புக்கு அழகாகுமல்லவா?

* * *

'பாவமன்னிப்பு' படத்தில் யாருடைய நடிப்பு மிக உயர்ந்தது? என்று எங்கள் வீட்டிலுள்ள குட்டி நடிகரைக் கேட்டேன். அவர் திருப்பி, உனக்கு யார் நடிபபு மிகவும் பிடித்துள்ளது? என்று கேட்டார். எம். ஆர். ராதாதான் என்றேன்.

* * *

எம். ஆர். ராதா ஒரே கூச்சலிட்டுப் பேசுவதாயும் நடிப்பு வேடிக்கையாக இருப்பினும் இயற்கையாக இல்லையென்றும், அது,'காகேச்சர்' (மிகைப்படுத்திய கேலிச் சித்திரம்) என்று சொல்லிவிட்டு, தனக்கு எஸ். வி. சுப்பையாவின் நடிப்பே மிகவும் பிடித்திருப்பதாயும், அதுவே இயற்கையாக இருப்பதாயும் சொன்னார்!

இக்காலத்தில் சினிமாவைப் பற்றி குழந்தைகளுக்குத் தெரிந்தது நமக்குத் தெரியாது. எந்தப் படத்தில் எந்தெந்த நடிக, நடிகைகள் நடிக்கிறார்கள், எப்படி நடிக்கிறார்கள் எந்தத் தியேட்டரில் எந்தப் படம் ஓடுகிறது, இனிவரும் புதுப்படங்கள் என்ன என்ற விபரங்களெல்லாம் இக் காலக் குழந்தைகளுக்கு நன்கு தெரியும் இதில்ஒருபரீட்சை வைத்தால்குழந்தைகள் நூறுற்குநூறு மார்க் எடுப்பர். எனக்கு இரண்டொரு புள்ளியாவது கிடைக்குமா? என்பது சந்தேகமே.

* * *

டில்லி 'லோக் சபை' தலைவர் அனந்தசயனம் அய்யங்கார் பாவ மன்னிப்பு படத்தைப் பார்த்துவிட்டு, பெரிதும் பாராட்டியதுடன் சமூக சமரச பிரசாரத்துக்கு இது நல்ல படமென்றும் ராஷ்டிரபதி ராஜேந்திர பிரசாத் இதைப் பார்க்க வேண்டுமென்றும் தெரிவித்தாராம்.

இப் படத்தைப் பார்த்த பின், எனக்கு நல்ல சினிமா படங்களைப் பார்க்க வேண்டுமென்று மீண்டும் ஆசை பிறந்துள்ளது. ஒரு நண்பரும் வந்து இதே யோசனை கூறினர். வாய்ப்புக் கிடைக்கும் போது சென்றுபார்த்து எழுதுகிறேன்.

* * *

கல்லோயா சீனித் தொழிற்சாலையில் 10 லட்சம் போத்தல் 'கல்லோயா ஸ்பெஷல் மது பானம்' உற்பத்தி செய்யப் போவதாயும், அதன் மூலம் அரசாங்கத்துக்கு 80 லட்சம் ரூபாய் லாபம் கிடைக்கலாமென்றும் ஒரு செய்தி தெரிவிக்கிறது.

கல்லோயா தொழிற்சாலை இனி நஷ்டத்தில் நடக்குமோ என்று அஞ்சத் தேவையில்லை. சீனித் தொழிற்சாலையை மது பான தொழிற்சாலையாக மாற்றிவிட்டால், நஷ்டம் வராதல்

(5ம் பக்கம் பார்க்க)

பெல்கிரேடிலேயே பிரதமர் இருக்கட்டும்

பிலிப் குணவர்த்தன யோசனை

கொழும்பு, திங்கள்

"தமது கணவர் காட்டிய வழியில் அரசாங்கத்தை நடத்திச் செல்வதற்கு முடியாவிட்டால் பிரதமர் பெல்கிரேட்டிலேயே நிரந்தரமாகக் குடியேறி விடுவது நல்லது" என்று எம். ஈ. பி. தலைவர் திரு. பிலிப் குணவர்த்தன நேற்று மாலை ஹைட்பார்க்கில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் பேசுகையில் கூறினார்.

புதிய வரவு செலவுத் திட்டத்துக்கும் அவசரகால நிலையை நீடித்து வைத்திருப்பதற்கும் ஆட்சேபம் தெரிவிக்குமுகமாக எம். ஈ. பி. யினால் ஒழுங்கு செய்யப்பட்ட இக் கூட்டத்தில் திரு. பிலிப் குணவர்த்தன மேலும் பேசுகையில் பாட்டாளிகளுக்கு நன்மை செய்யப்போவதாக உறுதியளித்த இந்த அரசாங்கம் பாட்டாளி மக்களுக்கு மேலும் கஷ்டத்தையே கொடுத்துள்ளதென்றார்.

"துண்டு விழும் தொகையைச் சரிக்கட்டுவதற்கு வேறு வழிகள் உண்டு. ஆனால் நமது நிதி மந்திரி மாவு, சீனி, தீப்பெட்டி ஆகியவைகளின் விலைகளை உயர்த்திவிட்டால் ஏற்கனவே கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் மக்களுக்கு 4 சதவிகித அபிவிருத்தி வரி மேலும் கஷ்டத்தை கொடுத்துள்ளது என்று திரு. குணவர்த்தன கூறினார்.

துண்டு விழும் தொகையைச் சரிக்கட்டுவதற்கு தொழிலாளர்களை கசக்கிப்பிழிய வேண்டியது அவசியமானால், அரசாங்கம் மற்றவர்களுக்குச் சந்தர்ப்பத்தைக் கொடுத்து விட்டு வெளியேறுவது நல்லது என்று திரு. பிலிப் கூறினார்.

டாக்டர் டபிள்யூ. எஸ். கருணரத்தினா, திரு ரொபர்ட் குணவர்த்தன, திரு. லக்ஸ்மன் ராஜபக்ஷ ஆகியோரும் கூட்டத்தில் பேசினர்.

55வயதில் அரசாங்க ஊழியர் ஓய்வுபெறும் விஷயம்

பிரதமர் திரும்பியதும் கொள்கை விளக்கப்படுமென அறிவிப்பு

கொழும்பு, திங்கள்

ஐம்பத்தைந்து வயதுக்கு மேற்பட்ட அரசாங்க சேவையாளர்கள், தாம் இளைப்பாறிக் கொள்ளும் காலத்திற்கு முன்னதாக மூன்று மாத விடுமுறை பெற்றுக்கொள்வது பற்றி டாக்டர் என். எம். பெரேரா இன்று பார்லிமெண்டில் பிரஸ்தாபித்தார். இவ் விஷயம் பற்றிக் கலந்தாலோசிப்பதற்கு இரவு எட்டு மணியின் பிற்பாடு நேரமளிக்கப்படவேண்டும் என அரசாங்கதைக் கேட்டுக் கொண்டார். இது சம்பந்தமாக விவாதம் எதுவும் நடத்த வேண்டியதில்லையெனவும் 55 வயதில் இளைப்பாற வேண்டிய நியதி பற்றிய அரசாங்கத்தின் கொள்கையை அரசாங்கம் வெளியிட்டால் மட்டும் போதும் எனவும் டாக்டர் என். எம். பெரேரா கேட்டுக்கொண்டார்.

55 வயதில் இளைப்பாறுவது பற்றி எதிர்க்கட்சியினராகிய தாமும், தமது சொந்தக் கொள்கையை உடையவர்கள் எனவும் தமது கொள்கையை அரசாங்கத்திற்கு பிரஸ்தாபிக்கத் தாம் விரும்புவதாகவும் டாக்டர் என். எம். தெரிவித்தார்.

இது பற்றிய முடிவான பேச்சு வார்த்தைகளைச் செப்டம்பர் மாதம் 14-ந் திகதி வைத்துக்கொள்ளலாம் என கைத்தொழில் உள் நாட்டுக் கலாச்சார மந்திரி திரு. மைத்திரிபால சேனநாயக்கா பேசுகையில் கூறினார். 55 வயதுக்கு மேற்பட்ட அரசாங்க சேவையாளர்கள் வேலையிலிருந்து இளைப்பாற வேண்டும் என்று அரசாங்கம் தீர்மானித்ததென்றும், ஆனால் பிரதமர் திருமதி பண்டாரநாயக்கா பெல்கிரேட்டிலிருந்து திரும்பி வரும் வரை இவ் விஷயம் பற்றிய தீர்மானத்தை ஒத்தி வைக்கத் தீர்மானித்துள்ளது என்றும் திரு. மைத்திரிபால சேனநாயக்கா தெரிவித்தார்.

இவ்விஷயம் பற்றி ஆராய்வதற்கு, ஐம்பத்தைந்து வயதிற்கு மேற்பட்ட சேவையாளர்களின் புள்ளி விபரங்கள் மட்டுமே மந்திரி சபைக்குத் தேவைப்படுகின்றது எனத் திரு. மைத்திரிபாலா கூறினார். இவ் விஷயங்கள் பற்றிய பேச்சு வார்த்தைகளைப் பிரதமர் திரும்பும் வரை ஒத்தி வைப்பதற்கு டாக்டர் என். எம். பெரேரா சம்மதித்தார்.

கப்பல் கார்ப்பரேஷன் மசோதா பார்லிமெண்டில் சமர்ப்பிக்கப்பட்டது

கொழும்பு, திங்கள்

சபாநாயகர் திரு. பெல்பொலவின் தலைமையில் இன்று பார்லிமெண்ட் கூடியபோது இலங்கைப் போக்குவரத்துச் சபையின் 1959-வது ஆண்ட றிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. போக்குவரத்து இலாகாத் தற்காலிக மந்திரி இவ்வறிக்கையைப் பார்லிமெண்டில் சமர்ப்பித்தார்.

வர்த்தக, உணவு, கப்பல் மந்திரி திரு. டி. பி. இலங்கரத்ன கப்பல் கார்ப்பரேஷன் மசோதாவொன்றைச் சமர்ப்பித்தார். பொருள்களுக்கும் பிரயாணிகளுக்கும் அரசாங்க கப்பல் போக்குவரத்து வசதியளிப்பதற்கும், அரசாங்க சொத்தாகக் கப்பல்களை வைத்திருப்பதற்கும், கப்பல்களும் மற்றைய கடல் போக்குவரத்து வாகனங்களும் அரசாங்க உரிமையுடையதாய் இருப்பதற்கும் இம் மசோதா இடமளிக்கின்றது. இத்தகைய கப்பல் கார்ப்பரேஷனை அரசாங்கம் கண்காணிக்கவேண்டிய பொறுப்பும் மேற் கூறப்பட்டவற்றிற்கு வழிவகை தேடிக் கொள்ளவேண்டிய பொறுப்பும் இம் மசோதாவில் இடம் பெற்றுள்ளன.

திருடர் தாக்கியதால் மரணமானார்

தம்பதெனியா, திங்கள்

திருடர்களின் கத்திக் குத்துக்கும் தடியடிக்கும் ஆளாகியதன் காரணமாக மீவெவாவைச் சேர்ந்த கே. பி. அண்டிறிஸ் என்பவர் மரணமானார். அவரது வீட்டினுள் வலோற்காரமாகப் புகுந்த திருடர்கள் அவரைக் கொன்றதோடு அவரது மனைவியையும் தாக்கினார்கள். தாக்கப்பட்ட அவரது மனைவி குருநாகல் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

இது சம்பந்தமாக நாரம்மலைப் பொலிஸ் நால்வரைச் சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர்.

தோட்டப் பள்ளிக்கூடங்களின்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கூடத்தில் 5 மணி நேரம் படிப்பிக்கவேண்டும்.

வேறுகாரணம்

72,886 இந்திய வம்சவளியினரின் குழந்தைகளும் 8,64,000 மக்களின் குழந்தைகள் மேலும் இந்தப் பிள்ளைகளுக்குக் கல்வி வசதி பெறமுடியாததற்கு இன்னும் பல காரணங்கள் உள. தோட்ட முதலாளிமாரும் அரசாங்கமும் இவர்களிடம் நடக்கும் முறை, தோட்டத் தொழிலாளர்களின் பொருளாதார நிலை, தோட்டங்களுக்கும் பள்ளிக்கூடங்கட்கும் உள்ள தூரம், என்பன இவற்றுட் சில தோட்டக் துரைமார் பள்ளிக்கூடங்களுக்குச் செல்லாத பிள்ளைகளைப்பற்றிப் புகார் செய்ய வேண்டுமென சட்டமிருந்தும் துரைமார் இதனைச் செய்வதில்லை.

சாதாரணமாகத் தோட்டப் பாடசாலைகளில் ஒரு ஆசிரியரே எல்லா வகுப்புகளையும் படிப்பிக்க வேண்டும்.

தோட்டப் பாடசாலைகள் எவ்வளவுமோசமானதாக இருக்கின்றன என்பது மேலேகாட்டப்பெற்ற விபரங்களிலிருந்து அறியலாம். முழுநேரப் பள்ளிக்கூடத்திற்கும் ஒருகரும் பலகைதான் உண்டு. கட்டிடம் மாட்டுக் கொட்டில் போலத்தோன்றும். எல்லா வகுப்பும் ஒரு வகுப்பறையில் தான் நடைபெறும்.

இந்நாட்டில் உள்ள பாடசாலைகளிலேயே மோசமான நிலையில் நிர்வகிக்கப்படும் பாடசாலைகள் தான் தோட்டப் பாடசாலைகள். பெரும்பான்மை தோட்டத் தொழிலாளர்களுக்கு வாக்குரிமை இல்லை என்பது உண்மை. ஆகவே, அவர்கள் இது விஷயமாக பார்லிமெண்டில் எடுத்துக்கூற வசதியற்றவர்களாக இருக்கின்றார்கள்

அரசாங்கம் உடனடியாக தோட்டப் பள்ளிக்கூடங்களையும் எடுத்து இந்நாட்டில் மற்ற குழந்தைகளுக்கு கொடுக்கும் கல்வி வசதிகளைத் தோட்டத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கும் அளிக்குமாறு வேண்டுகின்றோம்.

தொழிற் கல்வி பயில 150 பேர் வெளிநாடு செல்வார்

கொழும்பு, திங்கள்

இரும்பு எஃகு தொழிற்சாலை, டயர் டியூப் தொழிற்சாலை சம்பந்தமாக விசேஷ பயிற்சி பெறுவதற்காக சுமார் 150 பேரை அரசாங்கம் வெளிநாடுகளுக்கு அனுப்பவிருக்கிறது. அதிகமானவர்கள் சோவியத் ரஷ்யாவுக்கு அனுப்படவிருக்கிறார்கள். மிகுதி பேர் இந்தியாவுக்கும், ஐக்கிய அரபுக் குடியரசுக்கும் அனுப்பப்படுவார்கள்.

தொழிற்பயிற்சி பெறுவதற்கு வெளிநாடு செல்வதற்கான விண்ணப்பங்கள் வெகு விரைவில் அழைக்கப்படும்.

சிறைச்சாலையில் கைதிகள் கலவரம்

சச்சரவுக்கு கஞ்சா காரணம்

கொழும். திங்கள்

வெலிக்கடைச் சிறைச்சாலையில், மூன்று கிழமைகளுக்கு முன் இரண்டு கிறைக் கைதிகள் கோஷ்டிக்கிடையில் நிகழ்ந்த கைகலப்பைத் தொடர்ந்து, சிறைச்சாலையில் நெருக்கடியும் யபமும் நிலவி வருகிறது. கைகலப்பின் போது கைதிகள் கத்திகளையும், கூரான ஆயுதங்களையும் பிரயோகித்தனர். நெடுங்காலமாக சிறைவாசம் அனுபவித்து வரும் இரண்டு கைதிகள், சக கைதிகளுக்கு கஞ்சா விற்பதிலிருந்து தான் இரு கோஷ்டிகளுக்கிடையிலும் கைகலப்புத் தொடங்கியது. தகாத முறையில் இரு கைதிகள் நடந்து கொண்டதையிட்டு, கைதிகளுக்கிடையில் ஏற்பட்ட வாக்குவாதம் தான் கைகலப்புக்கு உடனடியான காரணம் எனத் தெரிய வருகிறது.

கைகலப்பினால் காயங்கள் பட்ட கைதிகள் சிறைச்சாலை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

"சோஷலிஸ அமைப்பு இலங்கையில் இல்லை"

டொரிக் டி' சூசா கருத்து

பேராதனை, திங்கள்

"இலங்கை அரசாங்கம் ஒரு சோஷலிஸ அரசாங்கம் என்று சொல்லிக்கொண்டாலும், இலங்கையில் சோஷலிஸ அரசாங்க அமைப்புக்கிடையாது. பொருளாதார சமூக சக்திகளைஒன்று சேர்ப்பதற்கான ஒரு ஆரம்பத் திட்டம் இந்த அரசாங்கத்திடம் கிடையாது" என இலங்கைச் சர்வகலாசாலை பொருளாதார மன்றத்தில், "ஜனநாயகமும் சோஷலிஸமும்" என்னும் பொருள் பற்றிப் பேசும் போது திரு. டொரிக் டி' சூசா கூறினார்.

திரு. டொரிக் டி' சூசா தொடர்ந்து கூறியதாவது:-

"ஜனநாயகமும், சோஸலிசமும் இன்று 'ஆசைவார்த்தை' களாகப் பயன்படுத்தப்படுகின்றன. இன்று எல்லோரும் சோஸலிஸ்டும், ஜனநாயகவாதியும் தான்! கட்சிப்பிரசாரங்களிலும் இந்த வார்த்தைகள் பிரமாதமாக அடிபடுகின்றன. ஆனால் இந்த இரண்டு வார்த்தைகளும் எல்லாக்கட்சிகளுக்கும் ஒரே அர்த்தத்தைக் கற்பிக்கின்றன என்று சொல்ல முடியாது.

"மன இயல்புக்கும் இந்த இரு வார்த்தைகளுக்கும் இருக்கும் தொடர்பு நீக்கப்பட வேண்டும். சரியான முறையில் இந்த வார்த்தைகளுக்கு அர்த்தம் கொள்ளவேண்டும். பெருமளவாகவோ அல்லது சிறிதளவாகவோ மக்கள் அரசாங்க நிர்வாகத்தில் பங்குபற்றுவது தான் ஜனநாயகம். இதுதான் அந்த வார்த்தையின் அர்த்தம்.

"இந்த அர்த்தத்திலிருந்து நாம் பிசகக் கூடாது. ஜனநாயகம் என்ற சொல்லின் அர்த்தத்தை நாம் ஏற்றுக்கொண்டால், சோஷலிஸம் ஜனநாயகத்தை விடப் புறம்பானது என்பதுதெரிந்துவிடும். சோஷலிஸம் என்பது ஒரு வித சமூக அமைப்பு. சோஷலிஸம் உற்பத்திச் சாதனங்களை ஒருமைப்படுத்துவதற்கும், தொழிலாளர் உற்பத்தியை விநியோகம் செய்வதற்குமான ஒரு சாதனம்.

"மக்கள் அரசாங்கநிர்வாகத்தில் பங்குபற்றுவதுதான் ஜனநாயகம் என்றால், ஜனநாயகம் அரசாங்க அமைப்பிலிருந்து வேறுபட்டது என்பது தெளிவாகும். ஜனநாயகம் ஒரு சமூக அமைப்பைக் குறிப்பிடுகிறது என்றால் அது தவறான கருத்தாகும். ஜனநாயகம் அரசாங்க நிர்வாகத்தை நடத்துவதற்கான ஒரு அமைப்பு. ஆனால், அரசாங்கம் எப்படியிருக்க வேண்டும் என்பதை 'ஜனநாயகம்' உணர்த்தவில்லை. ஏதன்ஸ் நகரில் ஒரு ஜனநாயகம் இருந்தது. அதில் சமஸந்தர்ப்பம் கொடுக்கவில்லை. அது ஒரு அடிமைச் சமூக அமைப்பு."

காற்று மண்டலத்தில் அணு சோதனை தடைசெய்ய யு. எஸ். பிரிட்டன் யோசனை

வாஷிங்டன், செப். 4

தரைக்கு மேல் காற்று மண்டலத்தில் அணு ஆயுதங்களைப் பரீட்சை செய்வதை உடனடியாகத் தடைசெய்வதற்கு ஒப்புக் கொள்ளுமாறு சோவியத் பிரதமர் குருஷ்சேவை அமெரிக்க ஜனாதிபதி கென்னடியும் பிரிட்டிஷ் பிரதமர் மாக்மிலனும் கூட்டாகக் கேட்டுள்ளனர்.

கதிரியக்கத்தினால் மக்களுக்குத் தீங்கு ஏற்படுவதைத் தவிர்க்கவும் உலக நெருக்கடியைத் தணிக்கவுமே காற்று மண்டலத்தில் அணு ஆயுத பரிசோதனைகளைத் தடை செய்ய வேண்டுமென்று அமெரிக்காவும் பிரிட்டனும் கூட்டாக இக்கோரிக்கையை விடுத்துள்ளனவென்று தெரிவிக்கப்பட்டது.

காற்று மண்டலத்தில் அணு ஆயுதங்களைப் பரிசோதனை செய்வதால் குறிப்பாக சோவியத் யூனியன் சமீபத்தில் தெரிவித்த புதிய ரக அணுகுண்டுகளைப் பரீட்சை செய்வதன் மூலம் ஐரோப்பா முழுவதிலுமுள்ள மக்கள் கதிரியக்கத்தால் பெரிதும் பாதிக்கப்படுவார்களென்று தெரிவிக்கப்பட்டது.

அணு ஆயுதங்களைப் பரீட்சை செய்வதற்கு சோவியத் யூனியன் இப்பொழுது திட்டமிட்டுள்ளபடி சகல பரீட்சைகளையும் முடித்துக் கொள்வதற்கு முன்னர் காற்று மண்டலத்தில் அணுஆயுதங்களைப் பரீட்சை செய்வதற்குத் தடை செய்ய வேண்டுமென அமெரிக்க, பிரிட்டிஷ் தலைவர்கள் விரும்புகின்றனர்.

அமெரிக்கஅதிபரும்பிரிட்டிஷ் பிரதமரும் கூட்டாக அனுப்பிய இந்த யோசனைக்கு சோவியத் யூனியன் இதுவரை கருத்துத் தெரிவிக்கவில்லை.

9-ந் திகதிவரை அவகாசம்

காற்று மண்டலத்தில் அணு ஆயுதங்களைப் பரிசோதனை செய்வதைத் தடைசெய்ய வேண்டுமென்ற யோசனைக்கு உடனடியாகத் தந்தி மூலம் பதிலனுப்புமாறு அமெரிக்க, பிரிட்டிஷ் தலைவர்கள் சோவியத் பிரதமரைக் கேட்டுள்ளனர். சோவியத் பிரதமரின் பதிலுக்கு இம்மாதம் 9-ந் திகதிவரை காத்துக் கொண்டிருப்பதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அணுஆயுதப் பரீட்சைத் தடை சம்பந்தமாக ஜெனிவாவில் நடைபெற்று வந்த மகாநாடு இன்று மீண்டும் கூடுகிறது. இந்த மகாநாட்டில் காற்று மண்டலத்தில் அணு ஆயுதங்களைப் பரீட்சை செய்வதைத் தடை செய்ய வேண்டுமென்ற யோசனையை பிரிட்டிஷ், அமெரிக்கப் பிரதிநிதிகள் கொண்டு வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

காற்று மண்டலத்தில் அணு ஆயுத சோதனை செய்வதைத் தடை செய்ய வேண்டுமென்ற யோசனையை சோவியத் ரஷ்யா ஏற்றுக் கொள்ளுமென வாஷிங்டனில் அரசாங்க வட்டாரங்கள் நம்பிக்கை தெரிவித்தன.

ஐயாறன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

லவா? ஆனால் குடி பெருகி குற்றங்கள் அதிகரிக்குமே என்று கவலைப்படுகிறீர்களா? ஆனாலும் எப்படியும் அரசாங்கத்துக்கு நஷ்டம் வரப்படாது தானே!

ஆலய வழிபாட்டின் அவசியம்

சாவகச்சேரி, திங்கள்

"ஆலய வழிபாடும், சமய நெறி ஒழுக்கமும் தவறியதனால் இன்று சமுதாயப் பிரிவினையும் அமைதியின்மையும் தலைகாட்டத் தொடங்கியிருக்கிறது. ஒவ்வொருவரும் தமது கிராமங்களில் உள்ள ஆலயங்களில் சிறப்பான முறையில் பூசை, அபிஷேகம், ஆராதனை செய்து வழிபட்டு வருதல் வேண்டும். அப்பொழுதுதான் நமது கிராமமும் நாடும் செழிப்படையும்" என்று நுணாவில் வீரபத்திரர் ஆலய பரிபாலனசபைக் கூட்டத்தில் அதன் தலைவர் திரு. சு. தம்பு உரை நிகழ்த்தும்போது கூறினர்.

வீரபத்திரருக்கு இம்மாதம் 12-ந் திகதி சங்காபிஷேகம் செய்வதென்றும், 15-ந் திகதி விசேஷ அபிஷேகமும் ஆராதனையும், அன்னதானமும் செய்ய வேண்டுமென்றும் சபை தீர்மானித்தது.

"பொதுப்பணியில் ஈடுபடவேண்டும்"

உடுப்பிட்டி, திங்கள்

"பொதுவுடமை வாதிகள் தங்கள் கொள்கைகளைப் பரப்பிக்கொண்டு வரும் இன்றைய காலகட்டத்தில் தன்னலமற்ற பொதுப் பணியில், பொதுவாகக் கத்தோலிக்க மக்களும், சிறப்பாக இளைஞரும் உடனடியாக ஈடுபடவேண்டியது அவசியம்" என்று நேற்று முன்தினம் வதிரி. அர்ச். அந்தோனியார் ஆலய மண்டபத்தில் கத்தோலிக்க வாலிபர் கம்மேளனக் கூட்டத்தில் உரை நிகழ்த்திய கொழும்பு சென். பெனடிக்ற் கல்லூரி ஆசிரியர் அ. நித்தியானந்தராஜா குறிப்பிட்டார். சங்கத்தலைவர் திரு. எஸ். மைக்கேல்பிள்ளை தலைமைவகித்தார்.

'திருப்தியான முறையில் பரீட்சை ஏற்பாடு'

சங்கீத பரீட்சை பற்றி தலைவர் விளக்கம்

யாழ்ப்பாணம், செவ்.

வடஇலங்கைச் சங்கீத சபையினால் நடத்தப்படும் இவ்வாண்டுக்குரிய சங்கீத பரீட்சைகளின் நடைமுறைகளைப் பற்றி சங்கீத சபைத் தலைவரும் வித்தியாதிகாரியுமாகிய திரு. எஸ். யூ. சோமசேகரம் தெரிவித்ததாவது:

"கடந்த ஆண்டுகளில் இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பெற்ற பரீட்சகர் பரீட்சையை நடாத்தி வந்ததால் பரீட்சையின் முடிபை அறிய குறைந்தபட்சம் ஏழெட்டு மாதம் வரை சென்றது. இதனால் அடுத்த பரீட்சைக்கு ஆயத்தம் செய்வதற்கு பரீட்சையின் முடிபுகளை விரைவில் அறிந்து கொள்ள இயலாதிருப்பது பரீட்சார்த்திக்கு மிகவும் கஷ்டமானது.

ஆசிரிய தராதரத்துக்குரிய பரீட்சை எடுப்பவர்களும் பரீட்சையின் முடிபைக் கூடிய விரைவில் அறிந்து கொள்ள முடியாது. ஆசிரியத் தொழிலிற் சேர்ந்து கொள்ளவும் இது தடையாயிருக்கின்றது.

பல ஆண்டுகளாக இந்தியாவிலிருந்து வந்த பரீட்சகரின் அநுபவத்தைக் கொண்டு எங்கள் நாட்டுக் கலைஞர்களும் பரீட்சைகளைத் தாமே நடாத்துவதற்குரிய ஆற்றலும் அநுபவமும் உடையவர்களாயிருப்பதை உணர்ந்தே இந்த ஒழுங்கு செய்யப்பட்டது.

சங்கத் தலைவரும் காரியதரிசி கலையரசு கே. சொர்ணலிங்கமும் பரீட்சை நடைபெறும் இடங்களுக்குச் சென்று பரீட்சை திறமையாக நடைபெற்று வருவதைக் கவனித்து வருகிறார்கள்.

சங்கீத ஆசிரியர்கள் மத்தியிலும், இசையிலும் மாணவர்கள் இடையிலும் திருப்தி ஏற்படுத்தும் முறையிலும் சங்கீதக் கலை மேன்மேலும் வளர வேண்டுமென்ற நன்நோக்கத்தின் பேரிலும் இவ்வித ஒழுங்குகள் பாரபட்சமற்ற முறையில் நடைபெற்று வருகின்றன இவ்வொழுங்குகட்கேற்ப கர்நாடக சங்கீதத்தில் நல்ல ஞானமும் அநுபவமும் பெற்ற கலைஞர்களையே தேர்ந்தெடுத்து இவ்வாண்டுப் பரீட்சகர்களாக நியமிக்கப்பட்டுள்ளது. இலங்கை வானொலி இசைப்பகுதி அதிகாரி பிரம்ம ஸ்ரீ கே. எஸ். பாலசுப்பிரமணியர், சங்கீத வித்தியாதரிசினி ஸ்ரீமதி சரஸ்வதி வேலாயுதபிள்ளை, செல்வி பரமேஸ்வரி. பரம் எம். ஏ. (சங்கீதம்) ஸ்ரீமதி ஸ்ரீதேவி பத்மநாதன் (பி. எம். சங்கீதம்) என்பவர்கள் இவ்வாண்டுப் பரீட்சையை நடாத்தி வருகின்றார்கள். ஆசிரிய தராதரத்திற்குரிய பரீட்சையும் ஏற்றவாறமைய ஒழுங்குகள் செய்யப்பெற்றுள்ளன.

வேலையற்ற வாலிபருக்கு வேலை தேடித்தர சங்கம் முயற்சி

கொழும்பு, திங்கள்

மொரட்டுவை பார்லிமெண்ட் தொகுதியிலுள்ள வேலையில்லாதோரின் பெயர் விவரங்கள் கொண்ட ஒரு இடாப்பைத் தயார்செய்வதற்கு மொரட்டுவை வாலிபர் முன்னேற்றச் சங்கம் ஒழுங்குசெய்துவருகிறது. இதுசம்பந்தமாகவாலிபர் சங்கம் வேலையற்றோரது பெயர் விவரங்களைத் தமக்கு அறிவிக்குமாறு கேட்டுள்ளது. இவ்வாறு வேலையற்ற வாலிபாகளுக்கு வேலை வழங்கும்படி வர்த்தக ஸ்தாபனங்களையும் வாலிபர் சங்கம் கேட்டுள்ளது.

மருத்துவத்தில் பயிற்சியளிக்கும் ஒரு வகுப்பை வாலிபர் சங்கம் ஆரம்பித்துள்ளதோடு கோழிப்பண்ணைகள் நடத்துவதற்கும் வழிவகைகள் செய்து வருகின்றது.

அரசாங்க மசோதாக்களுக்கு காலி எம். பி. கண்டனம்

மாத்தறை, திங்கள்

"அரசாங்கம் 57 முட்டைகளை இட்டிருக்கிறது. அநேகமான முட்டைகள் பழுதடைந்தவை. அதனால்தான் வேலையில்லாத் திண்டாட்டம் இலங்கையில் பரவாக இருக்கிறது" என இலங்கை வர்த்தகர் சங்க மாத்தறைக் கிளையில் காலி எம். பி. திரு. தஹநாயக்கா, இலங்கை அரசாங்கம் நிறைவேற்றியிருக்கும் மசோதாக்கள் பற்றிப் பிரஸ்தாபிக்கையில் குறிப்பிட்டார்.

இறக்குமதி, விநியோகம் சம்பந்தமாக கூட்டுறவுமொத்த விற்பனவு ஸ்தாபனத்துக்கும் கூட்டுறவு நிலையங்களுக்கும் கொடுத்திருக்கும் சலுகைகளை இலங்கை வர்த்தகர்களுக்கு வழங்கும்படி அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளும் முகமாக கூட்டம் கூட்டப்பட்டது. தென் இலங்கையின் பல பாகங்களிலிருந்து பலதரப்பட்ட வர்த்தக ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் இக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

திரு. தஹநாயக்கா தொடர்ந்து பேசுகையில் தெரிவித்ததாவது:

குதிரைப் பந்தய செய்திகளைப் பிரசுரிப்பதற்கு அரசாங்கம் தடை விதித்திருக்கிறது. இப்போது குதிரைப் பந்தய செய்தியைப் பிரசுரித்து வந்தவர்கள், கிரிக்கட் செய்தியையும், இங்கிலாந்தில் நடக்கும் குதிரைப் பந்தயச் செய்திகளையும் இரகசியமாகப் பிரசுரிக்கிறார்கள்."

தலைமை ஆசிரியர் மகாநாடு

மன்னார், திங்கள்

மன்னார்ப்பகுதி வித்தியாதிகாரி திரு. எஸ். கனகசபாபதியின் கீழ் தலைமையாசிரியர்களின் மகாநாடு ஒன்று நேற்று சென். சேவியர்ஸ் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. நளாந்தப் பாடங்களை ஆயுத்தப்படுத்துதல் போன்ற பல விஷயங்கள் ஆராயப்பட்டன. கடமை பெரிதென விளக்கப்பட்டுக் கூட்டம் முடிவுற்றது.

கள் உண்ட இருவர் மரணம்

மாத்தறை, திங்கள்

மாத்தறை டியாகஹாவின் முன்னை நாள் கிராம விதானை திரு. பிரான்ஸிஸ் பாலிகவர்த்தன என்பவரும் பேர்ட்டி என்னும் அவரது கள்ளிறக்கும் தொழிலாளரும் நஞ்சு கலக்கப்பட்ட கள்ளை உண்டதன் காரணமாக மரணமானார்கள்.

கள்ளுண்டவுடனேயே பேர்ட்டி என்பவர் நோயுற்று விழுந்த இடத்திலேயே மரணமானாராம். பாலிக வர்த்தனமயக்க நிலையிலிருந்ததனால் உடனே ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார். அங்கு சென்ற சிறிது நேரத்தில் அவர் மரணமானார்.

"ஆசிரியர் கடமை"

காத்தான்குடி, ஞாயிறு

"மாணவர்களே வருங்காலப் பிரஜைகளாவர். அவர்கள் அறிவும், பண்பும் உள்ளவர்களாகத் திகழ்ந்தால் தான் நாடு சுபிட்சமுடன் திகழும். அறிவு ஊட்டுவதோடு ஆசிரியப்பணி முற்றுப்பெறாது. ஒழுக்கத்தையும் மாணவரிடை வளர்க்க வேண்டியதும் ஆசிரியரது கடமையாகும். நல்லாசிரியனைப்பின் பற்றும்மாணவன் அவரிடமுள்ள நற் பண்புகளைக் கைப்பற்றிக் கொள்கிறான். இதற்கு மாணவனுக்கும் ஆசிரியருக்குமிடையில் நெருங்கியபிணைப்பு வேண்டும்."

இவ்வாறு மட்டக்களப்புத் தெற்கு வட்டார ஆசிரியர் சங்கத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்துப் பேசும்போது வித்தியாதிகாரி திரு. எம். ஜே. சீமான்பிள்ளை குறிப்பிட்டார். கல்லடி அரசினர் பாடசாலையில் நடைபெற்ற இக்கூட்டத்துக்கு புதிதாக வகுக்கப்பட்ட வட்டாரத்தைச் சேர்ந்த சுமார் 200க்கு மேற்பட்ட ஆசிரியர்கள் பங்கு பற்றினர்.

பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்: திரு. எம். ஜே. சீமான்பிள்ளை, தலைவர்: கே. கணபதிப்பிள்ளை, உபதலைவர்கள்: திருமதி. கே. வேலுப்பிள்ளை, திரு. வி. கணபதிப்பிள்ளை, ஜனாப். எம். கே. எம். இஸ்மாயில், காரியதரிசி: திரு. வி. தம்பிராசா, உபகாரியதரிசிகள்: ஜனாப். எஸ். ஆதம்லெவ்வை, திருமதி. விசுவாசம், தனாதிகாரி: திரு. எஸ். பி கணபதிப்பிள்ளை.

4 லட்சம் குழந்தைகள் பள்ளிக்கூடம் செல்வதில்லை

பராமரிப்பு கமிஷனர் தகவல்

காங்கேசன்துறை, திங்கள்

"சுமார் ஒருகோடி ஜனத்தொகைகொண்ட இலங்கையில், 30 லட்சத்துக்கு அதிகமான குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 4 லட்சத்துக்கு மேலான குழந்தைகள் பள்ளிக்கூடம் போகவேண்டிய வயதுள்ளவர்களாயிருந்தும், பள்ளிக்கூடம் போவதில்லை" என்று குழந்தைகள் பராமரிப்புப் பாதுகாவல் கமிஷனர், செப்டம்பர் 2-ம் திகதி ஆரம்பமாகிக் கொண்டாடப்படும் சர்வதேச குழந்தைகள் தினம் சம்மந்தமாக பாதுகாவலர் அதிகாரிகளுக்கும் தமது நிர்வாகத்தின் கீழ் உள்ள நிலையங்களின் அதிகாரிகளுக்கும் விடுத்துள்ள சுற்றறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

அவர் அறிக்கையில் மேலும் கண்டிருப்பதாவது:-

"அனாதைகள், கைவிடப்பட்டவர்கள் துணையற்றவர்கள் என்று 6,000 குழந்தைகள் ஆனாதை விடுதிகளிலும், குழந்தைபராமரிப்புநிலையங்களிலும் இருக்கிறார்கள். இன்னும் அதிகமான குழந்தைகளுக்குப் போதிய பாதுகாப்பு, பயிற்சி, தகுதி வாய்ந்த கல்வி தேவைப்படுகிறது. இவர்கள் சமூகத்தில் எந்தவிதக் கண்காணிப்புமின்றி, தமக்கே உரித்தான பாதையில் செல்வதால் ஒழுக்கமும், உடல்நிலையும் பெரிதும் பாதிக்கப்படக்கூடிய விளைவுகள் ஏற்படுகின்றன.

"கிடைக்கக்கூடிய வசதிகளை வைத்துக்கொண்டு, தனிப்பட்ட சமூகசேவா ஸ்தாபனங்களின் உதவியுடன் நமது சேவையின் நோக்கத்தை விஸ்தரிக்க முயலவேண்டும்".

சர்வதேச குழந்தைகள் தினத்தில் மேலெழுந்தவரியாக ஈடுபடாமல், சமூகசேவை ஸ்தாபனங்களின் தொண்டை பொதுமக்கள் அறியத்தருவதோடு, நாட்டின் வருங்கால சந்ததிக்காக சேவைக்குப் பொதுமக்களின் ஆதரவைத் திரட்டும்படியும், கமிஷனர், தமது சுற்றறிக்கையில் பாதுகாவலர் அதிகாரிகளைக் கேட்டிருக்கிறார்.

ஏஜண்டுகள் தேவை

ஈழநாடு தினசரிப் பத்திரிகை விற்பனை செய்வதற்கு அடியில் கண்ட இடங்களுக்கு முன்பணம் கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை.

ராகலை	ரத்தட்டை
பதியப்பெலை	வத்துகாமம்
பத்தனை	கட்டுகாஸ்தோட்ட
கடுகஞ்சேனை	மாவத்தகம
டைகாமம்	குருணகலை
அக்ரப்பத்தனை	பண்டாரவளை
தலவாக்கெலை	வெலிமடை
ரம்படை	ஹப்புத்தல
பூண்டுலோயா	கொசலாந்தை
வட்டகொடை	ஹாலிஎல
மாத்தளை	கந்தகெதர

விபரங்களுக்கு:

ஜெகஜோதி அன் கோ.,
14, திருக்கோணமலை வீதி, கண்டி.

10,000,000 மக்களும் விரும்பி வாங்குவன!
இலங்கை முழுவதும் புகழ் பரப்புவன!
எவை?

டொலர்

ALUMINIUM INDUSTRIES (CEYLON) LTD. ONE DOLLAR DOLLAR BRAND

பவுண் அடையாளம் உள்ள
அலுமினியப் பாத்திரங்களே!
ஏன்?

டொலர் அலுமினியம் மாற்று உயர்ந்தது சுத்தம் உள்ளது!

டொலர் அலுமினியம் அழகு அமைப்பு கண்கவர்ச்சி உள்ளது!!

டொலர் அலுமினியம் உறுதி உழைப்பு உத்தரவாதம் உள்ளது!!!

எல்லாவற்றிற்கும் மேல்

உங்கள் தாய்ப் பொன்னாட்டில் மாவிட்டபுரத்தில் நவீன முறையில் செய்யப்படுவது!

டொலர் பவுணை பார்த்து வாங்குங்கள்
எங்கும் கிடைக்கும்

டொலர் மாத்திரமே
உத்தரவாதமானது!

தயாரிக்குமிடம்:

அலுமினியம் இன்டஸ்ரீஸ் லிமி.,
மாவிட்டபுரம். யாழ்ப்பாணம்.
J. D. 3

வானொலி நிகழ்ச்சிகள்

கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00 இரவு 9-00)

செவ்வாய், 5-9-61

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவ நற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-30 திரை இசை, 8-00 வயலின், 8-15 இஸ்லாமிய கீதங்கள், பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை, மாலை 5-00 பிறந்த தின வாழ்த்துக்கள். 5-15 வளரும் பயிர், 5-45 திரை இசை, 6-15 கிராம சஞ்சிகை, 6-45 கிளாரினட், இரவு 7 00 பாட்டு, 7-30 நேயர் விருப்பம், 8-00 இஸ்லாமிய நிகழ்ச்சி. 9-15 இசைச் சித்திரம், 9-55 நாதஸ்வரம்.

திருச்சி

(செயதிகள்: காலை 7-15, பகல் 2, இரவு 7-15)

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப் பாடல்கள், 7-00 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள். 7-30 காந்தா சுவாமிநாதன் - பாட்டு, பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12 30 நடுத்தரப்பள்ளிகளுக்கு, 1-00 கதம்பம், 2-10 உயர்தரப் பள்ளிகளுக்கு, மாலை4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்), 5-45 இசைப் பயிற்சி, 6-15 கிராம நிகழ்ச்சிகள், இரவு 7-30 வி. கிருஷ்ணமூர்த்தி - பேச்சு, 7-45 எஸ். வி. பார்த்தசாரதி - பாட்டு, 9-15 சென்னை அஞ்சல், 9-30 நாட்டுப் பாடல்கள், 9-50 குரல் - சஞ்சிகை நிகழ்ச்சி.

விளையாட்டுப் போட்டியில் 10 புதிய சாதனைகள்

18 விளையாட்டுக் கழகங்கள் கலந்து கொண்ட போட்டி

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாண மாவட்ட உடற்பயிற்சிச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற 13வது வருடாந்த உடற் பயிற்சிப் போட்டியின் போது 10 புதிய சாதனைகள் ஏற்படுத்தப்பட்டன. இப்போட்டி யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் வண. பிதா. டி. கே. வில்சன் தலைமையில் நடைபெற்றது. இப்போட்டியில் 18 விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றின.

அரியாலை விளையாட்டுக் கழகம் 66 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தைப் பெற்றது. இக்கழகத்துக்கு எல். கே. எஸ். வெள்ளிக்கிண்ணம் வழங்கப்பட்டது. சொலி ஸ்ரார் விளையாட்டுக்கழகம் 47 புள்ளிகளும், வை. எம். சி. விளையாட்டுக் கழகம் 40 புள்ளிகளும் பெற்று முறையே 2ம், 3ம் இடங்களை அடைந்தன.

புதிய சாதனைகள்:-

100 மீட்டர் தூரத்தை 11.3 வினாடியில் ஓடி அரியாலை விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த பி. பஞ்சலிங்கம் என்பவர் புதிய சாதனை ஒன்றை நிலைநாட்டினார். அவர் 200 மீட்டர் ஓட்டத்திலும் 22.7 வினாடியில் ஓடி புதிய சாதனையை ஏற்படுத்தினர். 1500 மீட்டர் தூரத்தை சொலி ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த, கே. எஸ். ஆனந்தன் 4 நிமிடம் 23.2 வினாடியில் ஓடி புதிய சாதனையை நிலைநாட்டினர். அதே விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த வி. டி. சிவலிங்கம் என்பவர் 400 மீட்டர் தடைதாண்டி ஓடுதலில் புதியசாதனை ஒன்றை உருவாக்கினர். 4×100 மீட்டர் ஓட்டத்தில் அரியாலை விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த ஏ பிரிவினர் 45.4 வினாடியில் ஓடி புதிய சாதனையை ஏற்படுத்தினர்.

உயரப்பாய்தலில் என். எதிர்வீரசிங்கம் வை. எம். சி. கோஷ்டியின் சார்பில் 6 அடி நாலே கால் அங்குலம் பாய்ந்து புதிய சாதனையை நிலை நாட்டினர். சொலி ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த என். பாலசுப்பிரமணியம் இருபத்திரண்டேகால் அங்குலம் நீளப்பாய்ந்து புதிய சாதனையை நிலை நாட்டினர். கெந்தி அடிவைத்துப் பாய்தலில் சொலி ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த என். பாலசுப்பிரமணியம் நாற்பத்தேழு அடி முக்கால் அங்குலம் பாய்ந்து புதிய சாதனையை நிலைநாட்டியுள்ளார். தடியூன்றிப் பாய்தலில் வை. எம். சி. விளையாட்டுக கழகத்தைச் சேர்ந்த டபிள்யூ. டி. வின்சிலோ 11 அடி 9 அங்குலம் பாய்ந்து புதிய சாதனையை ஏற்படுத்தினர். பரிதி வட்டம் எறிதலில் காங்கேசன்துறை ரோயல் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த எம். ஏ. தியாகராசா 114 அடி 9 அங்குல தூரத்துக்கு எறிந்து புதிய சாதனையை நிலை நாட்டினர்.

சாம்பியன் கப் பெற்றவர்களின் விபரம்:

சிறந்த விளையாட்டு வீரனுக்குரிய வெற்றிக்கிண்ணம் வை. எம். சி. விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த என். எதிர்வீரசிங்கத்திற்கு வழங்கப்பட்டது. வீராங்கனைக்குரிய கிண்ணத்தை பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரியைச் சேர்ந்த ஜெயபாக்கியம் பேரல் பெற்றார். அஞ்சல் ஓட்டத்திற்குரிய வெள்ளிக்கிண்ணம் அரியாலைக்கு வழங்கப்பட்டது.

பிரதமரின் பெல்கிரேட் பேச்சு

லண்டன் பத்திரிகைகள் முக்கியத்துவம்

லண்டன், செப். 4

பெல்கிரேடில் நடைபெறும் நடுநிலைமை நாடுகளின் தலைவர்கள் மகாநாட்டில் இலங்கைப் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா நேற்று நிகழ்த்திய பேச்சை லண்டனின் பத்திரிகைகள் பலவும் பெரிய தலைப்புக்கள் கொடுத்து பிரசுரித்திருந்தன.

சில பத்திரிகைகள் திருமதி பண்டாரநாயக்காவின் உருவப் படத்தையும் பிரசுரித்திருந்தன. "தாயார் விடுக்கும் வேண்டுகோள்" "பெண்ணின் கோரிக்கை" என்று பத்திரிகைகள் கொட்டை எழுத்துக்களில் தலைப்புக் கொடுத்து அவரது உரையைப் பிரசுரித்திருந்தன.

வட்டுக்கோட்டை இளைஞர் மன்றம்

விளையாட்டுப் போட்டி முடிவு

வட்டுக்கோட்டை, திங்கள்

வட்டுக்கோட்டை இளைஞர் மன்றத்தார் சென்ற சனிக்கிழமை நடாத்திய இல்லங்களுக்கான வருடாந்த விளையாட்டுப் போட்டியில் காந்திஜி இல்லம் 226 புள்ளிகளைப் பெற்று, முதலாவது ஸ்தானத்தைப் பெற்றது. இளங்கோ இல்லம் 216 புள்ளிகளையும், வள்ளுவர் இல்லம் 190 புள்ளிகளையும் பெற்று இரண்டாம் மூன்றும் ஸ்தானத்தை அடைந்தன.

கேட்முதலியார் க. தியாகராசா பிரதம விருந்தாளராகக் கலந்துகொண்டார்.

விநோத உடைப் போட்டியில் குருடனாக வந்த ச. அருணகிரிநாதன் முதலிடத்தையும், மரக்கறி வியாபாரியாக வந்த வீ. கோபால சண்முகம்பிள்ளை இரண்டாம் இடத்தையும், பிச்சைக்காரனாக வந்த சிறுவன் தவராசா மூன்றும் இடத்தையும் பெற்றனர். புதுமணத் தம்பதிகளாக செல்வன் மகேந்திரமும் சிவநாதனும் உலா வந்த காட்சி பொதுமக்களைக் கவர்ந்தது.

மணமானவர்களுக்கும் மணமாகாதவர்களுக்கும் இடையில் நடந்த கயிறிழுத்தல் போட்டியில் மணமானவர்கள் வெற்றியீட்டி அதற்காண வெற்றிக் கிண்ணதைப் பெற்றனர். வெற்றி பெற்றவீரர், வீரரமணிகளுக்கு வட்டுக்கோட்டை கிராமச் சங்கத் தலைவர் முதலியார் செ. சின்னத்தம்பி பரிசில்களை வழங்கினர்.

வெற்றி பெற்றோர் விபரம் வருமாறு:-

அதிமேற்பிரிவு ஆண்கள்: க. குலசிங்கம், மேற்பிரிவு ந. விக்கினேஸ்வரமூர்த்தி, கீழ்ப்பிரிவு க. பரமநாயகம்.

மேற்பிரிவு பெண்கள்: த. அன்னலட்சுமி, மத்தியபிரிவு வே. செந்தில்மணி, கீழ்ப்பிரிவு ந. விமலாவதி.

இலங்களுக்கான கயிறில் முத்தல் போட்டியில் இலங்கோ இல்லம் முதலிடம்பெற்று உரிய வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்துக்கொண்டது. இல்லங்களுக்கான அஞ்சல் ஓட்டப் போட்டியிலும் இளங்கோ இல்லம் முதலிடம் பெற்றது.

உதைபந்தாட்டம்

செபஸ்தியான் வெற்றி

மன்னார், ஞாயிறு

மன்னார் பொலிஸ் கோஷ்டிக்கும் சென். செபஸ்தியான் கோஷ்டிக்குமிடையில் சென். சேவியர் மைதானத்தில் நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் சென். செபஸ்தியான் கோஷ்டி ஒரு கோலால் வெற்றிபெற்றது.

கிஸ்ஸெல் சாரி பேப்பிரிக்

உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் இப்புதிய சாரி பேப்பரிக்கின் அற்புதமான அழகொளியின் நிறங்களிலே முத்தின் மோகவைப் பகட்டு துலங்குவதைக் காணலாம். நன்கு கழிவிப் பாவிக்கக் கூடியது. சுருங்காது. சுருங்காது.

பங்காத நிறமும் எடுப்பான டிசைனும் அணிபவரின் அழகுக்கு அழகூட்டுகிறது. எழிலான பல அழகிய அச்சடி மோஸ்தரிலும், நிறங்களிலும் கிஸ்ஸெல் சாரி பேப்பிரிக்கைப் பெற்றுக்கொள்ளலாம்.

எகவிநியோகஸ்தர்கள்: சி. டபிள்யூ. ஈ. கடைக்குமிடம்.

சி.டபிள்யூ.ஈ. இலாக்கா ஸ்டோர்.
கோட்டை, கொழும்பு.
" மெக்கலம் ரோட்,
" மெயின் வீதி,
யாழ்ப்பாணம்.
" மருதானை மற்றும்
வெளியூர்

கிஸ்ஸெல் சாரி பேப்பிரிக்—சிறந்த வாழ்வுக்கு சி. டபிள்யூ. ஈ. அறபணிக்கும் ஒன்றாகும்.

நினைவிருக்கட்டும்- இப்பொழுதும், ஈ. உயர்ந்த ரக பெறுமதியைத் CWE எப்பொழுதும் உங்களுக்கு சி. டபிள்யூ. தருகிறது.

TX/224

கல்லோயா சாராயம் டிசம்பரில் விற்பனைக்கு வரும்

10 லட்சத்துக்கு மேலான போத்தல் தயாரிக்கப்படுமாம்

கொழும்பு, திங்கள்

கல்லோயா சீனித் தொழிற்சாலையில் வடிக்கப்பெற்று சுமார் 10 லட்சம் போத்தல் வடி சாராயம் டிசம்பர் மாத ஆரம்பத்தில் உள் நாட்டுச் சந்தையில் விற்பனையாவிருக்கின்றது. இச் சாராயம் சாதாரணமாக விற்கப்படும் சாராயத்திலும் பார்க்க 50 சதம் மேலதிகமான விலைக்கு விற்கப்படும். இவ்வடிசாராயம் கல்லோயா சீனித் தொழிற்சாலையின் உப உற்பத்திப் பொருள்களில் முக்கியமான தொன்றாகவிருக்கும்.

இவ் வருடம் ஜூன் மாதம் சீனி உற்பத்தி ஆரம்பமாகிய காலம் தொடக்கம் 2,000 தொன் கரும்புச் சக்கை இப்போது கிடைக்கின்றது. இவ்வளவு தொகைச் சக்கையிலிருந்து 220,000 கலன் குடிவகை தயாரிக்கலாம். கரும்புச் சக்கையின் தொகை வருட இறுதியில் அதிகரித்திருக்கும் போது சாராயமும் அதிகரிக்கலாம்.

உத்தியோக பூர்வமான அதிகாரி கூறியதாவது: சாராய வடி வேலைகள் அடுத்த மாதம் ஆரம்பமாகவிருக்கின்றன. தயாரிக்கப்படும் சாராயம் பரிசோதனைக்குள்ளாக வேண்டியிருப்பதால் டிசம்பர் மாத ஆரம்பத்துக்கு முன்னதாக விற்பனை செய்யப்படமாட்டாது.

இவ்வடி சாராயத்துக்கு என்ன பெயர் வழங்குவது என்பது பற்றி இதுவரை எதுவித தீர்மானமும் செய்யப்படவில்லை. 'கல்ஓபா ஸ்பெஷல்' என இதற்குப் பெயரிடக் கூடும்.

சுகாதாரத்திற்கு சுவையான ஆகாரத்திற்கு

தாமோதர விலாஸ்

சொந்தக்காரர்: P. A. நடேசபிள்ளை
239, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

சுவையான ஆகாரங்களா....
சுத்த பசும்பால் குளிர்பானங்களா...
சுகாதார சைவ போசனமா...
தேவைகளுக்கு உடன் விஜயம் செய்யுங்கள்
விசேட ஆடர்கள் உடன் கவனிக்கப்பெறும்.

சினிமாஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின்
உன்னத திரை ஓவியம்

வெற்றிகரமான 2வது வாரம்!

திங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை)
நவா (கொம்பனித்தெரு) கெப்பிட்டல் (ஆமர் வீதி கொழும்பு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) மனோகரா
ஸ்ரீகிருஷ்ணா (திருகோணமலை) விஜிதா (மஸ்கேலியா)
மொடர்ன் (பதுளை) விஜயா (மட்டக்களப்பு)
லக்ஷ்மி (இரத்தினபுரி) தீவொளி (நுவரேலியா)

சிவாஜி கணேசன்,
ஜெமினி கணேசன்,
எம். ஆர். ராதா,
எஸ். வி. சுப்பையா, சாவித்திரி
நடித்த

பாவ மன்னிப்பு

இதயத்தைத் தொடும் கீதங்கள்!
உள்ளத்தை உருக்கும் சம்பவங்கள்!
கண்ணைக் கவரும் காட்சிகள்!

காணத்தவறாதீர்கள்!

எல்லோரும் குடும்பத்துடன் பார்த்து
மகிழவேண்டிய படம்.

இப்பொழுது திரையிடப்படுகிறது!

மனோஹரா (யாழ்ப்பாணம்)

தினசரி மாலை 6 மணி இரவு 9-30 மணி

எஸ். எஸ். இராஜேந்திரன்-பண்டரிபாய்
நடித்த

அன்பு எங்கே ?

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

முதல் எதிரி என் தோள் மீது சுட்டார்

நெடுந்தீவு கொலை முயற்சி வழக்கில் சாட்சியம்

யாழ்ப்பாணம், திங்கள்

சட்டவிரோதமாகக் கூடிய தாயும், மரியான் மார்ட்டின் என்பவரைத் துப்பாக்கியால் சுட்டும், கத்திகளாலும், வாளாலும் வெட்டியும், தடிகளால் தாக்கியும், கொலை செய்ய முயன்றதாயும் 6 பேர் மீது குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கு டாக்டர் எச். டபிள்யூ தம்பையா கியூ. ஸி. முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

இச்சம்பவம் கடந்த 1959-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25-ம் தேதி நெடுந்தீவில் நடைபெற்றதாய்க் கூறப்பட்டது. லாரன்ஸ் இஸிடோர், லாரன்ஸ் ஜேக்கப், லாரன்ஸ் சவரிமுத்து தொம்மன் மரியான், சாலமன் அந்தோனிப்பிள்ளை, சந்தியோ மரியதாஸ் ஆகியோர் எதிரிகளாகக் குற்றஞ்சாட்டப்பட்டனர்.

முடிக்குரிய வழக்கறிஞர் திரு. பி. நகுலேஸ்வரன் அரசாங்கத்தின் சார்பாக ஆஜராஞர்.

திரு. என். டி. சிவஞானத்தின் அனுசரணையுடன் திரு. கே. வி. எஸ். சண்முகநாதன், திரு. டி. கனகசிங்கம் ஆகியோர் எதிரிகள் சார்பாக ஆஜராயினர்.

மரியான் மார்ட்டின் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

"எனது பெற்ருேர் சன் இறந்துவிட்டனர். எனது மூத்த சகோதரி மதலினுவுடன் நான் வசிக்கிறேன். சம்பவதினத்தன்று காலை 9 மணிக்கு எனது மூத்த சகோதரியின் வீட்டிலிருந்து இளைய சகோதரியின் வீட்டுக்குச் சென்றேன். மத்தியானம் அங்கிருந்து திரும்பிய போது "இதோ வருகிருன்" என்ற சப்தம் கேட்டது. நான் திரும்பிப் பார்த்தபோது 6 எதிரிகளையும், மற்ருெரு நபரையும் கண்டேன். முதல் எதிரி என்னை நோக்கித் துப்பாக்கியை நீட்டினுர். உடனே என்னை மறைததுக்கொள்ளும் பொருட்டு அங்கிருந்த தென்னை மரத்தை நோக்கி ஓடினேன். முதல் எதிரி, எனது வலது தோளை நோக்கிச் சுட்டார். 2 ம் எதிரி கத்தியால் என்னை வெட்டினர். 3 ம் எதிரி எனது கண்ணுக்குக் கீழே வெட்டினுர். 4 ம் எதிரி என் இடது காதுக்குக் கீழே வாளால் வெட்டினுர். 5 ம், 6 ம் எதிரிகள் தடிகளால் என்னைத் தாக்கினுர்கள்.

வழக்கு தொடர்ந்து நடைபெறுகிறது.

தனியாக இருந்த பெண்ணிடம் வம்புசெய்ய எத்தனித்தார்

எதிரிக்கு சிறையும் அபராதமும்

யாழ்ப்பாணம், திங்கள்

"இதுபோன்ற நடவடிக்கைகளை உறுதியுடன் ஒழித்துக் கட்ட வேண்டும்" என்று யாழ்ப்பாணம் நீதவான் திரு. அரசு வால்டன் ஒரு வழக்கில் எதிரிக்கு மூன்று மாதக் கடுழியச் சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கையில் குறிப்பிட்டார்.

உரும்பராயைச் சேர்ந்த தம்பையா கணபதிப்பிள்ளை என்பவரின் மனைவி பாக்கியத்தை கெடுக்கும் நோக்கத்துடன் பலாத்காரம் செய்ய எத்தனித்ததாக உருபம்ராயைச்சேர்ந்த நன்னியன் பசுபதிமீது குற்றம் சாட்டி சுன்னுகம் பொலிசைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் செபமாலை இவ்வழக்கைத் தொடர்ந்திருந்தார்.

பொலிஸ் சார்ஜன்ட் வாமதேவனின் உதவியுடன் திரு. எஸ். ஸி. கதிரவேலு பிராசிக்கியூஷன் தரப்பில் ஆஜராஞர். எதிரி தரப்பில் திரு. ஆர். விசுவநாதன் ஆஜராஞர்.

22 வயதான பாக்கியம் சாட்சியமளிக்கையில் பின்வருமாறு கூறினுர்:

உரும்பராயில் நானும் எனது கணவரும் ஒரு வீடு வாடகைக்கு எடுத்து வசித்து வந்தோம். எனதுகணவர்யாழ்ப்பாணத்தில் ஒரு பெட்ரோல் நிலையத்தில் வேலை பார்த்து வருகிருர். இவ்வருடம் ஏப்ரல் மாதம் 30-ம் திகதி எனது கணவர் வேலையிலிருந்து வரவில்லை. நான் வீட்டில் தனியாக இருந்தேன். வீட்டில் அணிந்திருக்கும் கவுன் அணிந்திருந்தேன். மாலை 5-30 மணியளவில் நான் எனது அறைக்குள்ளிருந்துவராந்தாவுக்கு வந்தேன்.

வராந்தாவுக்கு வந்தார்

அச்சமயம் எதிரி வராந்தாவில் நான் நின்ற இடத்தை நோக்கி வந்தபடியே "இவ்வளவு நாளும் இதுபோன்ற ஒரு சந்தர்ப்பத்தைத் தான் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்" என்று சொல்லிக் கொண்டு வராந்தாவில் ஏறி என்கையைப் பிடித்தார். தகாத நத்தைக்கு உடன்படுமாறு என்னைக் கேட்டார். நான் மறுத்ததுடன் கையை விடுவித்துக் கொண்டு 'வெளியே போய்விடு' என்று கூறினேன். உதவிக்கு கூச்சலிட்டேன்.

வராந்தாவின் ஒரு பக்கத்தில் கிடுகுகள் அடுக்கப்பட்டிருந்தன. எதிரி என்னை அந்தக் கிடுகுகள்மீது தள்ளி வீழ்த்தி என்னைக் கெடுக்க எத்தனித்தார். எனது ஆடையைக் கிழித்தார் நான் அவரிடமிருந்து தப்பிப்பதற்காக போராடிக் கொண்டிருந்தேன். எனது கூச்சலைக் கேட்டு அண்டை வீட்டுக்காரர்களான நடராஜாவும் நாகரத்தினமும் வந்தனர். அவர்கள் இச்சம்பவத்தைப் பார்த்தனர்.

நான் அடுப்படியை நோக்கி ஓடினேன். எதிரி எனது முதுகில் உதைத்துவிட்டுப்போனுர்.

இதன்பின் கால் மணி நேரத்தால் எனது கணவர் வீட்டுக்கு வந்தார். அவர் என்னை கிராமத் தலைமைக்காரரிடம் கூட்டிச் சென்ருர். அங்கு நான் புகார் செய்தேன்.

என் கணவரைப் பயமுறுத்தினுர்

தலைமைக்காரர் வீட்டிலிருந்து நாங்கள் வெளியே வந்த பொழுது வாசலில் எதிரி நின்று கொண்டு என் கணவரைப் பயமுறுத்தினுர். இதன்பின் நாங்கள் பொலிசுக்குச் சென்று புகார் செய்தோம். பரிசோதனைக்காக டாக்டரிடம் அனுப்பப்பட்டேன்.

குறுக்கு விசாரணையின் போது கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் பாக்கியம் பின்வருமாறு தெரிவித்தார்:-

எனது தகப்பனுர் பதுளையில் ஒரு கண்டக்டராக இருக்கிருர். நான் பதுளையிலிருந்த போதுதான் மணம் முடித்தேன். அதன்பின் யாழ்ப்பாணம் வந்தோம்.

அடுத்து சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். வேலும்மயிலும் சாட்சியமளித்தார்.

விசாரணை முடிவில் எதிரிக்கு மூன்று மாத கடுழியச் சிறைத் தண்டனையும் 50 ரூபாய் அபராதமும் அபராதம் செலுத்தத் தவறினுல் மேலும் ஒரு மாதக் கடுழியச் சிறைத் தண்டனையும் விதித்துத் தீர்ப்பளித்த நீதவான் தீர்ப்பளிக்கையில் மனிதத் தன்மையற்ற அருவருக்குகத் தக்க முறையில் எதிரி நடந்திருக்கிருர் என்று குறிப்பிட்டார். "கணவனில்லாத சமயத்தில் வீட்டில் தனியாக இருந்த பெண்ணிடம் தகாத முறையில் நடந்து கொள்ள எதிரி பலவந்தம் செய்ய எத்தனித்திருக்கிருரென்பதில் சிறிதும் ஐயமில்லை" என்று கூறிய நீதவான் இதுபோன்ற நடவடிக்கைகளை உறுதியுடன் ஒழித்துக் கட்ட வேண்டும் என்ருர்.

விற்பனைக்கு

கேப்பை பசுமாடு விற்பனைக்கு உண்டு. விபரங்கட்கு: டயறும்ஸ், மெயின் வீதி. யாழ்ப்பாணம்.

உங்கள் கடைசிச் சந்தர்ப்பம்!

சுத்தமான காஷ்மீர் சேலைகள்

சேலைகள் விற்பனை மிக விரைவாகப் போய்க்கொண்டிருக்கிறது !

10 % வீதம் கழிவு
உண்டு என்பதை மறவாதீர்கள் !

டயறும்ஸ் யாழ்ப்பாணம்
31

விரைந்து வாருங்கள்!

வெகு விரைவில் விற்பனையாகிறது !

வெள்ளை கேம்பிறிக்ஸ்

27" –90 சதம் மாத்திரம்

ஒருவருக்கு 10 யார் மாத்திரம் கொடுக்கப்படும்.
வி. பி. பி. ஓடர்கள் ஏற்கப்படும்.

டயறும்ஸ் யாழ்ப்பாணம்
32